
Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 28 செவ்வாய்க்கிழமை (15.11.2011) பக்கங்கள் 16 ஓசை - 45


ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1049)




கொள்கையை திரிவுபடுத்தும் குழு (08)



திணறும் தொழிலதிபர் (12)



அரசியலில் கத்துக் குட்டியாம் பிரபாகரன் (11)



அழிவின் ஆரம்பம் (14)

# இனப்பிரச்சினைக்கான தீர்வை உள்நாட்டிலேயே காணவேண்டும்

## இந்திய ராஜதந்திரி வலியுறுத்து



தமிழர்களின் சட்டபூர்வமான அபிலாசைகளைப் பூர்த்திசெய்கின்ற வகையில், ஐக்கிய இலங்கைக்குள் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்பினரும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வைக்காண்பதற்கு முயற்சிக்க வேண்டும் என இந்தியா வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலர் ஷியாம் சரண் தெரிவித்தார்.

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று நடைபெற்ற "இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையும் இலங்கையுடனான நட்பும்" என்ற தலைப்பில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வை உள்நாட்டிலேயே காணவேண்டும். எனினும் இந்தத் தீர்வு முயற்சியில் வெளியார் தலையீடு செய்ய முடியாது.

இலங்கையில் அரசியல் அமைப்பில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசாங்கமே மேற்கொண்டது. அது ஒன்றும் இந்தியா ஏற்படுத்திய திருத்தமல்ல அத்துடன் இலங்கையின் கொள்கையில் இந்தியா எவ்வித தாக்கத்தையும் செலுத்தமாட்டாது.

இந்தியா தனது நாட்டில் இனத்துவ ரீதியான விடயங்களைக்கையாண்ட அனுபத்தைக் கொண்டிருக்கிறது. அவ்வாறான அனுபவங்களை இலங்கை, இந்தியாவின் நட்பு நாடாக இருப்பதனால் இலங்கையுடன்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் கடற்படுகையில் 2 ஆவது கிணறிலும் எரிவாயு

மன்னார் கடற்படுக்கையில் கெய்ன் இந்தியா நிறுவனம் தோண்டிய இரண்டாவது எண்ணெய் கிணற்றிலும் இயற்கை எரிவாயு இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

Barracuda 1/G1 என்று பெயரிடப்பட்ட இந்த இரண்டாவது கிணற்றில் 4700 மீற்றர ஆழத்தில் எரிவாயுவுடன் மூன்று பெற்றோலியம் தாங்கி அமைப்புகளும், திரவ ஹைடரோகாபனும் இருப்பது தெரியவந்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. முதலாவதாக துளையிடப்பட்ட கிணற்றில் இருந்து 38 கி.மீ தொலைவிலேயே இந்தக் கிணறு துளையிடப்பட்டுள்ளது.

ஆனாலும், இந்த இயற்கை எரிவாயு வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்யக் கூடியவையா என்பதை உறுதிப்படுத்த மேலும் துளையிட வேண்டியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் முதலாவதாகத் துளையிடப்பட்ட கிணற்றில் இருந்த இயற்கை எரிவாயு கண்டறியப்பட்டது. எனினும் வர்ததக ரீதியில் உற்பத்தி செய்யத்தக்க நிலையில் உள்ளதா என்பது இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

# விடுவிக்கப்படாத மக்களின் இடங்களை மீளப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் உறுதியளிப்பு



தென்மராட்சிப் பகுதியில் விடுவிக்கப்படாத நிலையிலுள்ள பொதுமக்களின் வீடுகள், காணிகள், வீதிகள் மற்றும் பயிர்ச்செய்கை நிலங்கள் என்பவற்றை மீளப் பெற்றுக் கொடுப்பதற்கும் அப்பகுதிகளில் மக்களின் மீள்குடியமர்வு உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி நிவர்த்தி செய்து கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார்.

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றைய தினம் (15 ஆம் பக்கம் பார்க்க)

# விபசாரத்தில் ஈடுபட்டவர்களை விளக்க மறியலில் வைக்க உத்தரவு

யாழ். நகரப்பகுதியில் அமைந்துள்ள விடுதியொன்றில், விபசாரத்தில் ஈடுபட்டார்களௌன கைது செய்யப்பட்ட எட்டுப்பேர், நேற்றைய தினம், யாழ். நீதவான் நீதிமன்றில் பொலிஸார் ஆஜர்ப்படுத்திய வேளை, அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.மாவட்ட நீதிபதி அன்னலிங்கம் பிரேம் சங்கர் உத்தரவிட்டார்.

மூன்று பெண்கள் ஐந்து ஆணகள் உட்பட எட்டுப்பேரையும் யாழ் பொலிஸார் நேற்றுக் காலை 9.30 மணியளவில் நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர். இவர்களை விசாரணை செய்த யாழ் மாவட்ட நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை அனைவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன், முதலாம் இரண்டாம் சந்தேக நபர்கள் தவிர்ந்த ஏனைய ஐந்து பேரையும்

(15 ஆம் பக்கம் பார்க்க)

# பகிடிவதை என்ற போர்வையில் புகுமுக மாணவன் மீது தாக்குதல்

யாழ் பல்கலைக்கழக முதலாம் வருட மாணவன் பகடிவதை என்ற பேரில் தாக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியாசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். முல்லைத்தீவைச் சேர்ந்த 20 வயதான துரைராஜா தமிழ் செல்வன் என்ற மாணவனே இரண்டாம் வருட மாணவர்களினால் தாக்கப்பட்டு தலையில் பலத்த காயங்களுடன் யாழ் போதனா வைததியாசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. இத்தாக்குதல் தொடர்பாக குறித்த (15 ஆம் பக்கம் பார்க்க)

# அன்ரன் பாலசிங்கத்தை அமெரிக்காவிற்கு அழைத்துச் செல்ல விரும்பிய ஆர்மிரேஜ்

விடுதலைப் புலிகளின், ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பயங்கரவாத அமைப்பு ஒன்றின் உறுப்பினராக இருந்தபோதிலும், அவரை அமெரிக்காவிற்கு அழைப்பதற்கான அனுமதியை இராஜாங்கத் திணைக்களம் வழங்கியிருந்தபோது இலங்கையில் இராணுவநிலைகள் தாக்கப்பட்டன. இதனால் அன்ரன் பாலசிங்கத்தின் அமெரிக்கப் பயணத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குகள் அத்துடன் முடிவிற்கு வந்தன என அமெரிக்காவின் முன்னாள் உதவி இராஜாங்கச் செயலர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் தெரிவித்துள்ளார்.



இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சியில் நோர்வேயின் பங்களிப்புத் தொடரபான மீளாய்வு அறிக்கை ஒஸ்லோவில் வெளியிடும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார். இலங்கை ஜனாதிபதியாகக் கடமையாற்றிய சந்திரிகா குமாரதுங்கவுக்கும், பிரதமராக இருந்த

(15 ஆம் பக்கம் பார்க்க)

# சிவதாசனின் பூதவுடல் இன்று மக்கள் அஞ்சலிக்கு



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம் பரிய கைத்தொழில் முயற்சி மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களின் மாமனாரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மூத்த உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பனை அபிவிருததி சபையின் தலைவருமான சங்கரப்பிள்ளை சிவதாசன் அவர்கள் நேற்று முன்தினம மாலை காலமானார். அவரது பூதவுடல் 273, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில உள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமைச் செயலகததில்

(15 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்புடனான பேச்சு இரகசியமாக இருக்கக் கூடாது

## அரசைக் கோருகிறது ஐ.தே.கட்சி

அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை ஆரோக்கியமான முறையிலேயே நாங்கள் பார்க்கின்றோம். ஆனால கூட்டமைப்பும் அரசாங்கமும் இரகசியமான முறையில் பேச்சுக்களை நடத்தக்கூடாது. மாறாக வெளிப்படைத்தன்மையுடன் பேச்சுக்களை நடத்தவேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவிததார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது யோசனைகளை அரசாங்கத்துக்கு ஏற்கனவே வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் அவை எவ்வாறான யோசனைகள் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியககட்சிக்கு இதுவரை தெரியாது. எனவே அது தொடர்பில் நாங்களும் தெரிந்துகொள்ளவேண்டும் (15 ஆம் பக்கம் பார்க்க)

# அரச சேவை வெற்றிடங்கள் விரைவில் நிரப்ப நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

வடக்கில் உள்ள அரச சேவையில் உள்ள வெற்றிடங்கள் அனைத்தும் விரைவில் நிரப்பப்படும். ஏற்கனவே கடந்த இரண்டரை ஆண்டுகளில் 4980 பேருக்கு அரச சேவையில் நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கிறது என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தாதிய உத்தியோகத்தர், குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர் ரிசாட் பதியுதீன் ஆகியோர் நாடாளுமன்றத்தில் கொண்டு வந்த சிறப்பு அனுமதி கோரும் பத்திரத்தின் பிரகாரமே இந்நியமனங்கள் வடமாகாணத்திற்கு வழங்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்ட ஆளுநர் வவுனியா மாவட்டத்தில் மட்டும் 1985 நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

வடமாகாணத்தில் நீண்ட காலத்தின் பின்னர் இவ்வளவு தொகையான மருத்துவ தாதியர் மற்றும் மருத்துவ மாதுக்கள் நியமனம் செய்யப்படுவது முக்கியத்துவம் பெறுவதாகவும் குறிப்பிட்ட அவர், வடமாகாணத்தில் 95 வைத்தியர்கள் நியமனம் செய்யப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டதுடன் இதில் வன்னிப்பகுதி, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு வைத்தியசாலைகளுக்கு 61 வைத்தியர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வன்னியில் சேதமடைந்த அரசினர் வைத்தியசாலைகளும் புனரமைக்கப்பட்டு அவற்றுக்கான ஆளணியினரும் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் தொடர்ந்து ஆளணிப் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும் எனவும் தெரிவித்தார். (பா)

# நீரிழிவு நோயிலிருந்து பாதுகாப்பு யாழ். நகரில் விழிப்புணர்வு பேரணி

(யாழ்ப்பாணம்)

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு நேற்றுக்காலை யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து ஆரம்பமாகிய விழிப்புணர்வு ஊர்வலமொன்று யாழ். நகரில் நடைபெற்றுள்ளது.

நேற்றுக்காலை 8.00 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலை கிளினிக் பிரிவின் முன்பாக இருந்து ஆரம்பமாகிய இவ் விழிப்புணர்வு ஊர்வலம் வைத்தியசாலை வீதி வழியாக பருத்தித்துறை வீதியை அடைந்து அங்கிருந்து விக்டோரியா வீதி வழியாக நகர்ந்து மின்சார சபை வீதியூடாக யாழ். நகர் சென்று மீண்டும் வைத்தியசாலையை அடைந்தது.

ஊர்வலத்தில் பங்குபற்றியவர்கள் பதாகைகளையும் சுலோக அட்டைகளையும் தாங்கிவந்தனர்.

இந்நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராசா உட்பட வைத்தியர்கள், தாதியர், மருத்துவர்கள், நீரிழிவு நோயாளர்கள் போன்றோர் கலந்துகொண்டனர். (பா)

# அசுர வேகத்தில் 'டிப்பர்' ஏ-9 வீதியில் விபத்து அதிகம்

(யாழ்ப்பாணம்)

ஏ-9 வீதியில் இடம்பெறுகின்ற அதிகளவான விபத்துக்கள் டிப்பர் ரக வாகனங்களுடன் ஏற்படுகின்ற விபத்துகளாகவே காணப்படுகிறது என கிளிநொச்சி நகர போக்குவரத்து பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தற்போது ஏ-9 வீதி புனரமைப்பு பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகிறது இதற்காக ஒப்பந்த அடிப்படையில் பெருமளவான டிப்பர்கள் பணியில் ஈடுப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்த டிப்பர்களில் பெரும்பாலானவை ஏ-9 வீதியில் வேகக் கட்டுப்பாட்டை கடைப்பிடிக்காமல் அதிக வேகத்துடன் பயணிப்பதால் அதிகளவு விபத்துகள் டிப்பர் ரக வாகனங்களுடன் மோதுவதாலேயே ஏற்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (29)

# கனரக வாகனங்கள் மோதி நவீன சந்தை மேம்பாலம் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கஸ்தூரியார் வீதியினூடாகப் பயணிக்கும் பாரவூர்தி மற்றும் கொன்ரெயினர் போன்ற உயரம்கூடிய வாகனங்களால் நவீன சந்தைத் தொடரை இணைக்கும் மேம்பாலம் சேதமடைந்து வருகிறது.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதிக்கு குறுக்காக நவீன சந்தைக் கட்டடங்கள் இரண்டையும் இணைக்கும் இந்த மேம்பாலம் மேற்குறிப்பிட்ட வாகனங்கள் மற்றும் உயரமான வாகனங்கள் வீதியால் செல்லும் போது மேம்பாலத்தில் முட்டி மோதுவதனால் சீமெந்தினாலான இப்பாலம் சிறு சிறு துண்டுகளாக உடைந்து உள்ளிருக்கும் இரும்புக் கம்பிகள் தெரியுமளவுக்கு சேதமடைந்துள்ளது.

இந்த நிலை தொடருமானால் இப்பாலம் உடைந்து விழும் நிலை உருவாகும் என நவீன சந்தைக் கட்டடத் தொகுதி வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயத்தை பொலிஸார் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து இவ்வீதியில் கனரக வாகனங்களின் போக்குவரத்தை கட்டுப்படுத்தி மாற்றுப் பாதைகளால் இவ்வாகனங்களின் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தி மேலதிக சேதத்தை தவிர்க்குமாறும், உடைந்து போயுள்ள மேம் பாலத்தை புனரமைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறும் நவீன சந்தைக் கட்டடத் தொகுதி வர்த்தகர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# கிராய் வெளியில் குவிகிறது திண்மக்கழிவு தொற்றுநோய் பரவலை தடுக்க கோரிக்கை



(கரணவாய்)

கரணவாய் கிராய் பகுதியில் தினம் தினம் திண்மக் கழிவுகள் குவிகின்றன. இதனால் அப்பகுதியின் சுற்றுச்சூழல் கெட்டுப் போவதுடன் நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்தவண்ணம் உள்ளது. இதனைத் தடுத்து நிறுத்தும்படி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீண்டகாலமாக கரணவாய் கிராய் வெளியில் பெருமளவான குப்பைகள், கழிவுகள் வல்வெட்டித்துறை நகரசபை, பருத்தித்துறை நகரசபை, கரவெட்டி நகரசபை ஆகியவற்றினால் கொட்டப்படுகின்றன.

இக்கழிவுகளால் அருகில் உள்ள கிராமங்களுக்கு துர்நாற்றமும் மலேரியா டெங்கு போன்ற நோய்களைப் பரப்பும் நுளம்புப் பெருக்கமும் சுகாதார சீரழிவுகளும் பெருமளவான 'ஈ' பெருக்கமும் ஏற்படுகின்றது.

இதனால் இப்பிரதேசத்தைச் அண்டியுள்ள கிராம மக்கள் பெரும் அசௌகரியங்களை சந்திக்கின்றனர். எனவே இவ்விடத்தில் கொட்டப்படும் கழிவுகளை ஒதுக்குப்புறமான வேறொரு இடத்துக்கு மாற்றி மலேரியா, டெங்கு, யானைக்கால், வாந்திபேதி போன்ற நோய்களிலிருந்து இம் மக்களை பாதுகாக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் தமது கோரிக்கை மனுவில் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். (18)

# தடுப்பூசி போடும் நடவடிக்கை

வடமராட்சி கிழக்குப் பகுதியில் நெருப்புக் காய்ச்சலுக்கு எதிரான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இன்று காலை 9.00 மணி முதல் பி.ப 2.00 மணிவரை பருத்தித்துறை சுகாதார வைத்திய பணிமனையினால் இந்நடவடிக்கை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இதுவரை காலமும் உணவகங்களில் பணிபுரிபவர்களுக்கும் இந்தத் தடுப்பூசி ஏற்றப்பட்டது. எனினும் வடமராட்சி கிழக்கில் மலசலகூட வசதி போதாமையினால் தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளதால் இதனைப் போடுவதன் மூலம் 3 வருடத்துக்கு நெருப்புக் காய்ச்சல் வராமல் தடுக்கமுடியும் என பருத்தித்துறை சுகாதார பணிமனை அறிவித்துள்ளது. (116)

## திருட்டு முயற்சி முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவ விடுதியின் அருகில் சைக்கிள் ஒன்றை திருட முயன்ற இளைஞர் கையும் மெய்யுமாக பிடிபட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 3.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த இளைஞர் மருத்துவ விடுதியில் தரித்திருந்த சைக்கிளை திருட முயற்சித்த போது கடமையில் இருந்த பாதுகாப்பு ஊழியர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

இவ்வாறு பிடிக்கப்பட்டவர் கொய்யாத்தோட்டம் பகுதியைச் சேர்ந்தவராவார். மேலும் இவர் ஒரு காலை இழந்த நபர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எஸ்)


## கண்ணீர் அஞ்சலி



எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவரான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பனை அபிவிருத்தி சபையின் முன்னாள் தலைவருமான

**அமரர் சங்கரப்பிள்ளை சிவதாசன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களினைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**உரிமையாளர்**

**லாலா சோப், அச்சுவேலி.**

(C/1084)




## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1051)

11.11.2011 அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட பழந்தமிழர் இயக்கம் நிகழ்வில் யாழ். மாநகர சபை உறுப்பினர் மனுவல் மங்களநேசன் ஆசியுரை வழங்குவதையும் அருகில் அருட்திரு டிக்சன் அடிகளார், இவ்வியக்கத்தின் நிறுவுனரும், புள்ளிவிபரவியலாளருமாகிய ம.வித்தியானந்தநேசன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

# இளம் பெண் மரணம் தம்பசிட்டியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

அலரி விதை உட்கொண்ட பெண் ஒருவர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. பருத்தித்துறை - தம்பசிட்டி பகுதியைச் சேர்ந்த ராஜரட்ணம் சிவமலர் (வயது - 35) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரது மரணவிசாரணை பருத்தித்துறை மரணவிசாரணை அதிகாரி அன்ரலா வின்சன் தயாநினால் மேற்கொள்ளப்பட்டு உறவினர்களிடம் சடலம் கையளிக்கப்பட்டது. மரணமடைந்தவர் இரு பிள்ளைகளின் தாய் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எப்.எஸ்)

அனைத்து உயிர்களிடமும் அன்பு செலுத்த வேண்டும். இயற்கை விதியை அனுசரித்து வாழ வேண்டும். அடக்கம், பொறுமை, ஜீவ காருண்யம் போன்ற குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். - பாரதியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

# தீர்வுக்குச் செல்லும் பாதை!

இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவினதும் சர்வதேசத்தினதும் நிலைப்பாடு என்ன என்பதை மறுபடியும் ஒருவர் யாழ்ப்பாணத்திற்கு நேற்று வந்து அழுத்தியுரைத்திருக்கிறார். நாம்தான் இன்னும் 'கேளாச் செவியர்கள்' என்ற நடிப்பிலிருந்து மாறவே இல்லை.

இந்திய முன்னாள் வெளியுறவுச் செயலாளர் சியாம் சரண், "இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையும், இலங்கை இந்திய நட்புறவும்" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நேற்று உரையாற்றினார்.

இனப்பிரச்சினைக்கு எவ்வகையான தீர்வு என்பதை தமிழ் மக்களும் இலங்கை அரசாங்கமும் சேர்ந்தே தீர்மானிக்க வேண்டும். இந்தியா இதில் தலையிட முடியாது என்று ஆயிரத்தோராவது தடவையாக அவரும் வலியுறுத்தினார்.

தமிழ்த்தேசிய தீவிரப்போக்குக் கொண்ட பிரதிநிதிகள் 'இந்தியா உதவும், சர்வதேசம் உதவும்' என்ற நம்பிக்கைகளையே இங்கு தொடர்ந்து விதைத்து வருவதன் மூலம் தீர்வுப் பேச்சுக்களை மேல் நகரவிடாமல் செய்து வருகிறார்களே என்று கேட்கப்பட்டதற்கு, அத்தகைய நம்பிக்கைகள் எதையும் இந்தியா கொடுக்காது என தெளிவுபடச் சொன்னார் சியாம் சரண்.

இலங்கை அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள 13 ஆவது திருத்தம் இந்தியா கொண்டுவந்ததல்ல, அது இலங்கை அரசாங்கத்தினுடைய திருத்தம் என்றும், அதன் பிரகாரம் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படலாம் என்றும், ஆனால் இலங்கையின் கொள்கைகளில் நெருக்கமான நட்பு நாடு என்ற வகையில் இந்தியா எந்தவித அழுத்தத்தையும் பிரயோகிக்காது என்று அங்கு விளக்கினார் முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர்.

இதுதான் நிலைமை. இதை விளங்கிக்கொள்ளாதது போல நாம் நடித்துக்கொண்டிருக்கும் வரைக்கும் தீர்வை நோக்கிய எந்தவொரு சிறு அடிவைப்பையும் எடுத்து வைக்கப்போவதில்லை. 'இந்தியாவுக்கோ அமெரிக்காவுக்கோ, ஐரோப்பாவுக்கோ போய்த் தீர்வைத் தேடும் உங்களுக்கு, ஏன் உள்நாட்டுக்குள்ளேயே தெற்கோடு பேசவேண்டும் என்று தோன்றவில்லை அல்லது முடியவில்லை' என்று சிங்களப் புத்திஜீவிகளும் முற்போக்காளர்களும் நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள். அரசாங்கத்துடன் பேசமுடியவில்லை என்றால், இந்த நாட்டில் சேர்ந்தொன்றாய் வாழவேண்டிய மக்களுடன், அங்கே நமக்கு காதுகொடுக்கக் கூடியவர்களுடனெல்லாம் போய் ஏன் பேசக்கூடாது?

பிரச்சினைக்கான தீர்வை வைப்பதற்கான நெருக்குதலை அரசாங்கத்திற்குக் கொடுப்பதற்காக உலகமெல்லாம் போய் விருந்துண்டு வருகிறோம். அவர்கள் வாழைப்பழத்தில் ஊசியை மெல்ல ஏற்றுவது போல மிக நாசூக்காக "நீங்கள் உங்கள் நாட்டுக்குப் போய் பேசுங்கள்" என்று சொல்லியனுப்புகிறார்கள். நாம் ஏன் புரியாதது போல நம்மை நாமே ஏமாற்றிக்கொண்டிருக்கிறோம் அல்லது கள்ளமானதொரு தனிநாட்டுக் கனவு மயக்கத்தில் மக்களை மேலும் மேலும் அழுந்தவிட்டுக்கொண்டிருக்கிறோம்.

முதலில், முடிந்த வரையான தமிழ் கட்சிகளை அமைப்புக்களை ஒன்றிணைப்பதும், தொடர்ந்து ஏனைய சமூகங்களிலிருந்தும், நம் பிரச்சினையைப் புரிந்துகொள்பவர்களை ஒன்றிணைப்பதும் அதன் மூலம் அரசுக்கு நெருக்குதலைக் கொடுப்பதுமான வழிமுறைகள் பற்றியெல்லாம் நாம் சிந்திப்பதேயில்லை. சுலபமாக உச்சிக்குப் போய்விடும் ஏமாற்று நினைவிலேயே கீழே விழுந்துகிடக்கிறோம்.

இந்த நாட்டில் உள்ள மூவினங்களும் இணக்கமுறாமல், நமக்கு நிம்மதியான சுதந்திர வாழ்வு உருவாகப்போவதில்லை. அவர்களுடன் பேசி, அவர்களுக்கு நம்மைப் புரியவைத்து, நாம் ஒருவருக்கொருவர் விரோதிகள் இல்லை என்ற நம்பிக்கையை நாமே உருவாக்காமல் நம் பிரச்சினைக்கான தீர்வு எந்த மந்திரத்திலும் வந்து விழுந்துவிடாது.

இனங்களையும் மக்களையும் மேலும் மேலும் விலகச்செய்யும் பேச்சுக்களையும் செயற்பாடுகளையும் நாம் நிறுத்தியாக வேண்டும். எந்த மொழியைப் பேசுபவர்களாக இருந்தாலும், எந்த கலாசாரத்தைக் கொண்டவர்களாக இருந்தாலும் மனிதர்கள் என்ற வகையில் நாம் நம்பிக்கை கொள்ளவேண்டும். மற்றவர்களை நம்பாமல் நமக்கு வாழ்வில்லை. பேசமுடியும், அவர்களுக்கு நம்மை உணர்த்த முடியும், அதன் மூலம் சேர்ந்தொன்றாய் அதிகாரத்தின் செவிகளுக்குச் செய்தி சொல்லமுடியும் என்பதை நம்பிச் செயற்படுவதே நமக்கான தீர்வுப் பாதை.

– ஆசிரியர் –

# சமாதானத்தை வெற்றிகொள்ள வேலைத்திட்டங்கள் ஆரம்பம்

(கொழும்பு)

சமாதானத்தை வெற்றி கொள்ளும் செயற்பாட்டை நடைமுறைப்படுத்த அரசாங்கம் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றமை தொடர்பில் அந்நாட்டின் நிறுவனம் ஒன்றினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை வெளிவரவுள்ள நிலையில் இலங்கையில் இடம்பெற்ற சமாதான பேச்சுவார்த்தைகள் தொடர்பில் நோர்வே அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்நிலையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவந்ததும் அதில் உள்ள விடயங்களையும் நோர்வே வெளியிட்டுள்ள அறிக்கையையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையையும் நோர்வேயின் அறிக்கையையும் ஒப்பிட்டுப் பார்த்த பின்னரே எதனையும் கூறமுடியும். அறிக்கை தொடர்பில் முக்கிய விடயங்களை நாம் ஆராய வேண்டியுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நோர்வேயின் ஒஸ்லோவில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. அறிக்கை வெளியிடும் நிகழ்வில் இலங்கையில் சமாதான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற காலத்தில் விசேட தூதுவராகச் செயற்பட்ட எரிக்சொல்ஹெய்ம் கலந்துகொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்படவுள்ளன. அதன் பின்னர், நாட்டின் மனித உரிமை பாதுகாப்பு மற்றும் விருத்தி தொடர்பில் சர்வதேச ரீதியில் தெரிவூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## சின்மயா அபிவிருத்தி நிறுவனத்தின் இருநாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை சின்மயா மிஷன் கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையில் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட சின்மயா விழுமியன் 2 நாள் கருத்தரங்கு சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இந்தியாவில் சின்மயா மிஷன் வித்துவான்களினால் நடத்தப்பட்ட சின்மயா மிஷன் தூரநோக்குத் திட்டத்தை யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தும் நோக்குடனான அறிமுக நிகழ்வாக நடத்தப்பட்டது.

30 வருடகால யுத்தத்தின் பின்னர் யாழ்.மாவட்டத்தில் உள்ள இளைய சமூகத்தினரின் மத்தியில் விழுமியங்களைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் நடத்தப்பட்ட இக்கருத்தரங்கில் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேசங்களிலுள்ள அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், இந்துக் கலாசாரத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் 300 இற்கும் மேற்பட்ட இந்து சமய ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், இந்திய நாகபட்டினம் சுவாமி இராமகிருஷ்ணானந்த பரமச்சாரி ஜகாக்கிரத சைதன்யாவின் யாழ்.வதிவிட ஆச்சாரியார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (எஸ்)

## வினைத்திறனற்ற சொத்துக்களை தேசிய மயமாக்கும் சட்டம் பிழை

(கொழும்பு)

வினைத்திறனாக இயங்காத சொத்துக்களைத் தேசிய மயப்படுத்தும் சட்டம் பிழையான முன்னு தாரணமாகும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மேல்மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பல தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற மற்றும் நிறைவேற்று அதிகாரம் ஆகிய இரண்டுமே இந்தச் சட்டத்துடன் தொடர்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த சட்ட மூலத்தின் சில விடயங்களில் எமக்கு உடன்பாடு கிடையாது என அரசாங்கத்திடம் அறிவித்திருக்கிறோம்.

வினைத்திறனாக இயங்காத நிறுவனங்களைத் தேசிய மயப்படுத்துவது தொடர்பில் எந்த விதமான வரைமுறைகளும் பிறப்பிக்கப்பட வில்லை. நிறைவேற்று அதிகாரமே இதனைத் தீர்மானிக்கும்.

இந்த நடைமுறை உசிதமானதாக அமையும் எனக் கருத முடியும் என அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

# பாரத படுகொலைச் சந்தேக நபருடைய பெயரைப் பயன்படுத்தி கப்பம் கோரும் பெண்

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்களில் ஒருவரான கடத்தப்பட்ட கராட்டே தம்மிக்கவின் பெயரைப் பயன்படுத்தி பெண் ஒருவர் பாரிய கப்பம் கோரல்களில் ஈடுபட்டு வருவதாக புலனாய்வுப் பிரிவுத் தகவல் வெளியிட்டுள்ளது. தம்மிக்கவுடன் நெருங்கிப் பழகிய குறித்த பெண், செல்வந்தர்கள் மற்றும் வர்த்தகர்களிடம் இவ்வாறு கப்பம் பெற்றுக் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தம்மிக்க வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவித்து குறித்த பெண், கும்பல் ஒன்றைப் பயன்படுத்தி கப்பம் பெற்றுக் கொள்வதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். கராட்டே தம்மிக்கவின் சகாக்களை தம்பக்கம் ஈர்க்கும் நோக்கில் அண்மையில் கொதடுவ பிரதேசத்தில் பாரிய விருந்துபசாரமொன்றை குறித்த பெண் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடத்தப்பட்ட கராட்டே தம்மிக்க கொலை செய்யப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளது. இந்தக் கொலையுடன் தொடர்புடைய பாதாள உலகக் குழு நபர் ஒருவரை வலைவீசி தேடி வருவதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

# ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் சுவீகரிக்கப்பட்ட சொத்துக்கள் மீளளிக்கப்படும்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டால் சுவீகரிக்கப்பட்ட சொத்துக்களை மீளவும் உரிமையாளர்களிடம் வழங்கும் என பதில் எதிர்க்கட்சித் தலைவர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். அவசரமான சட்டமூலமொன்றின் மூலம் அரசாங்கம் நட்டமடையும் சொத்துக்களை சுவீகரித்துக் கொண்டுள்ளது.

சொத்துக்களை திடீரென சுவீகரித்துக் கொண்ட நடவடிக்கை ஓர் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாகவே கருதப்பட வேண்டும். அரசாங்கத்தின் இந்த எதேச்சாதிகார நடவடிக்கை குறித்து தற்போது வெளிநாட்டுக்கு விஜயம் செய்துள்ள கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க வெளிநாட்டுத் தலைவர்களுக்கு தெளிவுபடுத்தி வருகின்றார். ரணில் விக்ரமசிங்க நாடு திரும்பியதன் பின்னர் இது தொடர்பில் கட்சி எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இறுதித்தீர்மானம் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில்

# ஆரம்பப் பிரிவு பாடசாலைகளை விரைவில் ஆரம்பிக்கக் கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)


வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் ஆழியவளை, உடுத்துறை கிராமங்களில் ஆரம்ப வகுப்பு மாணவர்களின் நலன் கருதி ஆரம்பப் பாடசாலைகள் ஆரம்பிக்க வேண்டுமென இப்பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அண்மையில் நடைபெற்ற வடமராட்சி கிழக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில்கள் அபிவிருத்தி முயற்சி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா மற்றும் கல்வித் திணைக்கள உயரதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தனர்.

உடுத்துறை மத்திய மகாவித்தியாலயம், ஆழியவளை சீ.சீ.த.க. பாடசாலை என்பன 1000 பாடசாலைகள் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டில் இப்பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு பிள்ளைகள் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். உடுத்துறை மாணவர்கள் ஐந்து கிலோ மீற்றர் தூரத்திலுள்ள மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கும், ஆழியவளை மாணவர்கள் ஐந்து கிலோ மீற்றர் தூரத்திலுள்ள வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்துக்கும் சென்று தரம் ஒன்றில் கல்வி பயிலும் நிலை ஏற்பட்டுள்ளது.

பிரயாண வசதிகள் மிகவும் குறைவாகவுள்ள இக்கிராமப் பிள்ளைகள் பெற்றோரின் துணையின்றி தனியாக இவ்வளவு தூரம் சென்று தரம் ஒன்றில் கல்வி பயில முடியாத நிலையில் உள்ளனர்.

ஆகவே, உடுத்துறை, ஆழியவளைக் கிராமங்களில் ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் நலன் கருதி ஆரம்பப் பாடசாலைகள் அமைத்துத் தருமாறு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, கல்வித் திணைக்கள உயரதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (70)

## நெல்லியடி எரிபொருள் நிலைய வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை



(கரணவாய்)

யாழ். பருத்தித்துறை பிரதான வீதியில் குறிப்பாக நெல்லியடி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் உள்ள வீதிப் பகுதி பலத்த சேதமடைந்து காணப்படுவதால் அவ்வீதியூடான போக்குவரத்து சிரமத்தின் மத்தியில் இடம்பெற்று வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதி குன்றும், குழியுமாக காணப்படுவதால் துவிச்சக்கரவண்டிகள், வாகனங்கள் பயணத்தை மேற்கொள்வதில் இடையூறுகள் ஏற்படுவதாகவும், பாதசாரிகளும் இதனால் சிரமத்தை எதிர்நோக்குவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

எதிர்வரும் மழை காலத்திற்கு முன்னர் இவ்வீதியை செப்பனிட்டு புனரமைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பிரதேச பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (உ-18)

## யாழில் 25 மில்லியன் ரூபா செலவில் சமுர்த்தி வங்கிக் கிளைகள் நிர்மாணம்

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்தின் 08 பிரதேசங்களில் சமுர்த்தி வங்கிக் கிளைகள் 25.4 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக சமுர்த்தி உதவி ஆணையாளர் ச. சிவசிறி தெரிவித்துள்ளார்.

இதன்படி அளவெட்டி, உடுப்பிட்டி, கைதடி, கொடிகாமம், அம்பன், மருதங்கேணி மகா சங்கம் ஆகியன தலா 2.5 மில்லியன் ரூபா செலவிலும் காரைநகர், பருத்தித்துறை மகா சங்கமும் சமுர்த்தி வங்கியும் தலா 5.2 மில்லியன் ரூபா செலவிலும் நிரந்தரக் கட்டடங்களாக நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் இது வரை 20 சமுர்த்தி வங்கிக் சங்கங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. துன்னாலை நெல்லியடி, சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் இடப்பிரச்சினை காரணமாக இவ்வருடத்தில் பூர்த்தி செய்ய முடியாதுள்ளது. எனினும் அடுத்த வருடத்தில் இப்பிரதேசங்களில் சமுர்த்தி வங்கிக் கிளைகள் நிர்மாணிக்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (உ-116)

## சீரற்ற மின் விநியோக நடவடிக்கையால் பரீட்சை எழுதும் மாணவர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தற்போது மின் விநியோக நடவடிக்கை சீரற்ற நிலையில் காணப்படுவதால் அன்றாடச் செயற்பாடுகளை மேற்கொள்வதில் சிரமங்களுக்குள்ளாவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மின்சார சபையினால் பத்திரிகைகள் வாயிலாக மின் தடை பற்றிய அறிவித்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றபோதிலும் அதில் குறிப்பிட்ட நேரத்திற்கு மின்சாரம் வழங்கப்படுவதில்லை என அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

குறிப்பாக, இரவு 6.00 மணி முதல் 9.00 மணி வரையான காலப் பகுதியில் மின்சாரம் அவசியம் தேவையாகவுள்ள நிலையில் அந்நேரத்தில் மின் சாரம் தடைப்படுவதாகவும் இதனால் அடுத்த மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் கல்வி கற்ற முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சுன்னாகம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மின்சாரம் வழங்கப்பட்டு வரும் நிலையில் திங்கட்கிழமை மின்சாரம் தடைப்படுவதால் வார ஆரம்பச் செயற்பாடுகள் தடைப்படுவதாக பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அறிவித்தல்களின் படி மின்சார விநியோகத்தை வழங்கினால் எமது செயற்பாடுகளை தங்கு தடையின்றி மேற்கொள்ள ஏதுவாக இருக்கும் எனவே, இவ்விடயத்தில் மின்சார சபை கவனம் எடுத்து செயற்படவேண்டும என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (02)





யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியின் சிறுவர் தின நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரியின் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக வருகை தந்த சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயப் பங்குத் தந்தை அருட்தந்தை ஜெயரஞ்சன் மற்றும் அமலமரித் தியாகிகள் சபையின் அருட்தந்தை, கார்மேல் சபையின் அருட்சகோதரி உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், சிறுவர்களின் கலை நிகழ்வையும் காணலாம். (21)

### செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்தில் உள்ள பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பாக ஐந்து ஆண்டுகளுக்கான திட்டங்களைத் தயாரிக்கும் பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு இன்று இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இச் செயலமர்வில் வலிகாமப் பாடசாலைகளின் சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரன் கேட்டுக் கொர்ண்டுள்ளார்.

## மானிப்பாய்-காரைநகர் வீதி தார் ஊற்றிப் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மானிப்பாயூடான காரைநகர் வீதி தார் ஊற்றிச் செப்பனிடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் குன்றும் குழியுமாகக் காணப்பட்ட இவ்வீதியால் பொது மக்கள் சிரமத்தின் மத்தியில் பயணத்தை மேற்கொண்டு வந்தனர்.

குறிப்பாக, பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள் மற்றும் பாத சாரிகள் பல்வேறு இடையூறுகளை எதிர்நோக்கி வந்தனர்.

இதனை அடுத்து வீதி அதிகார சபையினால் இயந்திரங்களின் உதவியுடன் வீதியின் அனைத்து பாகங்களிலும் சீரான முறையில் தார் ஊற்றப்பட்டு துரித கதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இச்செயற்பாட்டினால் இனி வரும மழை காலங்களில் இவ்வீதி யூடாக சிரமமின்றி பொதுமக்கள் பயணம் செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (54)

### ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி கிழக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலெனரின் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்ளவுள்ளார். (உ-135)

## தரம் இழந்த நிலத்தை சோலையாக்கும் திட்டம்

(தீவகம்)

தரம் இழந்த நிலத்தை சோலையாக்கும் திட்டத்தின் கீழ் வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட நயினாதீவுப் பிரதேசத்தில் மரம் நடுகைத் திட்டமொன்று கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

வேலணைப் பிரதேச செயலர் நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வேலணைப் பிரதேச சபையின் நயினாதீவு உப அலுவலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், கடற்றொழில் சங்கத்தினர், நயினாதீவு சன சமூக நிலையத்தினர், விளை யாட்டுக்கழகத்தினர் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் 100 நிகழ் தரும் மரங்கள் நாட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் மணல் மேடுகளாக எதுவித பயன்பாடுகளும் இல்லாது காணப்படும் இடங்கள் பசும் சோலையான இடமாக மாற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-85)

## கிராம சேவகர் பிரிவுகளை அதிகரிக்குமாறு கோரிக்கை

(யாழ். நிருபர்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தற்போது உள்ள ஒன்பது கிராம சேவகர்கள் பிரிவுகளையும் எதிர்வரும் காலத்தில் பத்து பிரிவுகளாக மாற்றும்படி இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரைநகர் மேற்கு கிராம சேவகர் பிரிவும், காரைநகர் கிழக்கு கிராம சேவகர் பிரிவும் அதிகளவு மக்களைக் கொண்டு விளங்குகிறது. இந்த இரு பிரிவுகளையும் இணைத்து மூன்றாவது கிராம சேவகர் பிரிவு உருவாக்கப்பட வேண்டுமென கடந்த வாரம் சைவ மகா சபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.மேற்படி தீர்மானம் அடங்கிய மகஜர் காரைநகர் உதவி அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (10)



வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வில் வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். குட்டித்தம்பி வெற்றியீட்டிய மாணவனுக்கு பிரிசில் வழங்குவதைக் காணலாம். (109)

# துரித கதியில் இடம்பெறும் கிளிநொச்சி தபாலக கட்டுமானம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுத் தபாலக கட்டடத்திற்கான கட்டுமானப்பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த யுத்த அனர்த்தங்களினால் கடுமையாகச் சேதமடைந்த பொதுத் தபாலகத்தின் உடைந்த பழைய கட்டட இடிபாடுகள் அனைத்தும் முற்றாக அகற்றப்பட்டு புதிய வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இத்த பாலக கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஏ-9 வீதியில் கிளிநொச்சி நகரின் மையத்தில் அமைந்துள்ள இந்த இடத்தில் முன்னைய பொது தபாலகம் உடைந்த நிலையில் புனரமைப்பு செய்யப்படாது நீண்டகாலமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கிளிநொச்சி பிரதம தபாலகம் 2 சிறிய வர்த்தகநிலையக் கட்டடங்களில் பல்வேறு சிரமங்களின் மத்தியில் இயங்கிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பரந்தன் தபாலகத்தின் கட்டுமாணப் பணிகள் நிறைவடைந்துள்ள போதிலும் அவற்றில் சில திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படாமல் இருப்பதாவும் இதனால் தபாலகப் பணிகள் புதிய கட்டடத்திற்கு மாற்றப்படாமல் தனியார் வீடொன்றில் நெருக்கடியின் மத்தியில் இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கே)

# மாணவர்களின் ஆரம்ப அறிவை வளர்க்கவே புலமைப்பரிசில் பரீட்சை நடத்தப்படுகிறது



(காரைநகர்)

புலமை என்பது அறிவு அத்தகைய அறிவை மாணவர்கள் ஆரம்பத்திலிருந்து வளர்த்துக் கொள்வதற்காகவே தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நடத்தப்படுகிறது. இப்பரீட்சையின் மூலமே மாணவர்களின் திறமையும், அறிவும் தீர்மானிக்கப்படுகிறது. என யாழ்ரன் கல்லூரியின் முன்னாள் ஆரம்ப பிரிவு ஆசிரியர் சரஸ்வதி யோகலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ரன் கல்லூரியில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் பாடசாலை கல்வியில் முன்னேற்றம் கண்டு வருகிறது. ஆரம்பகாலத்தில் MPTA என அழைக்கப்பட்ட பரீட்சை தற்போது புலமைப்பரிசில் பரீட்சை என்ற பெயரில் நடைபெற்று வருகிறது.

பிள்ளைகள் ஊக்கத்துடன் சிறப்பாகப் படித்தால் மேலும், மேலும் உயர்ந்த சித்திகளைப் பெறலாம். கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களை மட்டும்களிலும் ஆர்வம் காட்டவேண்டும் இப்பரீட்சை மாணவர்களுக்கு சிறந்த அறிவைக் கொடுக்கின்றது.

இப்பாடசாலையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவித்து நினைவுச் சின்னத்தை வழங்கி அவர்களை ஊக்கப்படுத்துவது மகிழ்ச்சியளிக்கிறது. எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் வே. முருகமூர்த்தி, கல்விப் பணிப்பாளர் ஸ்ரீ விக்னேஸ்வரன் ஆகியோர் உரையாற்றினர். இதில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (உ-50)

# பலத்த சேதமடைந்து காணப்படும் யாழ். முதலாம் குறுக்கு வீதி

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெரு மிக மோசமாகச் சேதமடைந்து காணப்படுகிறது. அண்மையில் பெய்த பெரும் மழையால் வீதியின் முழுப்பகுதியுமே சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கிறது. இதனால் இவ் வீதியால் பயணம் செய்யும் பாதசாரிகளும் வாகன ஓட்டிகளும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

யாழ்.நகரின் பிரதான மகளிர் கல்லூரியான வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை இவ்வீதியிலேயே அமைந்துள்ளது. வீதியில் குண்றுகுழிகளில் மழைநீர் தேங்கியிருப்பதால் துவிச்சக்கர வண்டிகளில் செல்லும் மாணவிகள் விழுந்தெழும்பிச்செல்வதாகவும் அதனால் அவர்களது சீருடைகள் சேற்று நீரில் நனைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வீதித் திருத்த வேலைகளுக்குப்பொறுப்பானவர்கள் உரிய முறையில் வீதிகளைச் செப்பனிடாமையே. சிறிய மழைக்குக்கூட வீதிகள் மோசமாகப் பாதிக்கப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (10)

# புதிய நிர்வாகசபைத் தெரிவு

(கோப்பாய்)

கோப்பாய் மத்தி கிராம அபிவிருத்தி சங்கத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.நிர்மலன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவு இடம்பெற்றது.

இதில் சு. தயாளந்டேஸ்வரன் தலைவராகவும், செ.மதிமுகன் உபதலைவராகவும், மு. சண்முகலிங்கம் செயலாளராகவும், க. சிவயோகம் உபசெயலாளராகவும் க.செல்லத்துரை பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 7பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (உ-135)

# விபத்தில் காயமடைந்த பெண் சிகிச்சை பலனின்றி மரணம்

(கரணவாய்)

கரணவாய் குஞ்சர் கடைப்பகுதியில் அண்மையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த பெண் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இதில் அதே இடத்தைச்சேர்ந்த தேவி (வயது 60) என்பவரே உயிரிழந்தவராவார்.

நெல்லியடி பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையை அடுத்து மோட்டார் சைக்கிளை செலுத்திவந்த நபரை கைது செய்துள்ளதாகவும் இவர் உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவன் என தெரிவிக்கப்படுகிறது.

தற்போது குறித்த நபர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-18)

# மாதர் அபிவிருத்திச் சங்கங்களை மேம்படுத்த நடவடிக்கை

(யாழ். நிருபர்)

கோண்டாவில் வடகிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினை மேம்படுத்தும் வேலைத் திட்டங்களை 'சொண்ட்' நிறுவனம் மேற்கொள்ளவுள்ளது. இப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஏற்றவாறு மாதர்அபிவிருத்திச் சங்கத்தின் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

'சொண்ட" நிறுவனம் இவ்வமைப்புக்குப் பல்வேறு உதவிகளை வழங்கவுள்ளதுடன் அங்கத்தவர்களின் சுயதொழில் முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கும் செயற்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தவுள்ளது. (10)

# பழந்தமிழர் இயக்கம் யாழில் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் தொன்மையையும், வரலாற்றையும் ஆய்வு செய்து மக்களிடையே பிணைப்பையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் நோக்கில் "பழத்தமிழர் இயக்கம்" என்னும் பெயரில் அமைப்பு ஒன்று யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஆறு மணியளவில் கலைமகள் வீதி அரியாலையில் புள்ளிவிபரவியலாளர் இல்லத்தில் பழத் தமிழர் இயக்கத்தை இலங்கை வெளிவிவகார அமைச்சின் கட்டார் நாட்டிற்கான இலங்கைப் பிரதிநிதி ஐ.தரு மலிங்கத்தினால் அங்குரார்ப் பணம் செய்துவைக்கப்பட்டது.

புள்ளி விபரவியலாளர் மனுவல் வித்தியானந்தநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அருட்திரு. எக்ஸன் அடிகளார்,யாழ். மாநகரசபை உறுப்பினர் ம.மங்களநேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



யாழ். மாவட்ட தெங்கு அபிவிருத்தி சபையினால் பாடசாலைகளுக்கு குறுகிய கால தென்னங்கன்று வழங்கும் நிகழ்வில் சபை முகாமையாளர் வி.மகாலிங்கம் புலோலி மெ.மி.த.க. பாடசாலை அதிபருக்கு தென்னங்கன்றை வழங்குவதையும் அருகில் மருதங்கேணி கோட்டக்கல்விப்பணிப்பாளர் த.பொன்னையா நிற்பதையும் காணலாம். (109)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(15.11.2011–செவ்வாய்க்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
ஐப்பசி 29 ஆம் நாள்.
இராகுகாலம் 3.07-4.37, சுபநேரம் 10.37 -12.07வரை
நட்சத்திரம்: திருவாதிரை பி.ப . 2.15 வரை
திதி: சதுர்த்தி காலை 7.03 வரை

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:– பணம் கிடைக்கும், குடும்பத்தில் குதூகலம், உறவினர் வரவு, சகோதர பாசம், தேகம் சுகம்.

ரிஷபம:–குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், நண்பர்கள் உதவி, நினைத்ததைச் சாதித்தல், தேகம் நலம்.

மிதுனம் :–பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழில்லாபம், கடன் வசூல், அவசர முடிவு.

கடகம்:– குடும்பத்தில் கவலை, பணக்கஷ்டம், தொழில் நஷ்டம், சகோதரர்பகை, வாக்குவாதம்.

சிம்மம்:– பணக்கஷ்டம், வீண் அலைச்சல், அவசர முடிவு, சுபகாரியப்பேச்சு, தேகம் சுகம்.

கன்னி :– குடும்பத்தில் கவலை, காசு வரும், நண்பர்கள், உதவி, வேண்டாத செயல், தேகம்நலம்.

துலாம் :–பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், நண்பர் உதவி, கடன் வசூல் தேகம் சுகம்.

விருச்சிகம்:– குடும்பத்தில் மகிழ்ச்சி, காசுவரும், விருந்தினர் வருகை, முயற்சி தோல்வி, தேகம் சுகம்.

தனுசு:– பணம் வரும், குடும்பத்தில் குரோதம், பணம் சேமிப்பு, இனசன அழைப்பு, தேகம் சுகம்.

மகரம:– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் கிடைக்கும், தொழில் லாபம், அவசரம் வேண்டாம், வாக்குவாதம்.

கும்பம் :– பணம் கிடைக்கும், குடும்பத்தில் குதூகலம்,குடும்ப சந்தேகம், வேலைப்பழு, தேகம் நலம்.

மீனம் :– குடும்பத்தில் மகிழ்ச்சி, காசு வரும், வேண்டாத வன்செயல் தவறான முடிவு, உல்லாசப்பயணம்.

# யாழ். மத்திய கல்லூரி சம்பியன்



(யாழ்ப்பாணம்)

யாழ். வலய மட்ட கால்பந்து சம்பியன் பட்டத்தை யாழ். மத்திய கல்லூரி கைப்பற்றியது.

யாழ். வலய மட்டப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்துத் தொடரின் இறுதிப் போட்டியும், மூன்றாமிடத்திற்கான போட்டியும் நேற்றுக் காலை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும், சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி வலய மட்ட சம்பியனாகியது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றா மிடத்திற்கான போட்டியில் உரும்பிராய் இந்துக் கல்லூரி அணியும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (93)

# மைலோக் கிண்ண கால்பந்து மானிப்பாய் இந்து 3ஆம் இடம்



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்ற மைலோக் கிண்ணக் கால்பந்துத் தொடரில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

19 வயதுக்குட்பட்ட அகில இலங்கை பாடசாலைகள் அணிகள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இப்போட்டித் தொடர் நடைபெற்றது. கல்துறை மருதமுனையில் நடை பெற்ற இப்போட்டித் தொடரில் பல முன் னணி அணிகள் பங்குபற்றின.

நேற்று நடைபெற்ற இதன் அரையிறுதிப் போட்டியில் அம்பலாங்கொடை ஸ்ரீ தேவானந்த வித்தியாலய அணியை மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி எதிர் கொண்டது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் அம்பலாங்கொடை ஸ்ரீ தேவானந்த வித்தியாலய அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.


இதன் காரணமாக மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மூன்றாமிடத்திற்கான போட்டியில் மோதியது. இதில் ஹற்றன் சென் பொற்கோ வித்தியாலய அணியை மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது.

ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி இடைவேளைக்கு முன்னர் இரண்டு கோலையும், பின்னர் இரண்டு கோலையும் போட்டது. இறுதியில் 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. இப்போட்டியில் தனுசன் இரண்டு கோலையும், சுஜிபன், கோகுலன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் போட்டு அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தனர்.


இதேவேளை, கொழும்பு சென் ஜோசப் கல்லூரியினால் நடத்தப்பட்ட தேசிய மட்டக் கால்பந்து தொடரில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணஸ்ரீ கிண்ணத்தை வெற்றமை குறிப்பிடத்தக்கது. (93)

## நோபோட், மொறிஸ், லிவிங்ரன் சிறப்பான செயற்பாடு


# கொழும்பு அசோக கல்லூரியை வென்றது பற்றிக்ஸ்



நோபோட்



மொறிஸ்



லிவிங்ரன்

(யாழ்ப்பாணம்)

நோபோட், மொறிஸ், லிவிங்ரன் ஆகியோரின் சிறப்பான செற்பாட்டின் மூலம் கொழும்பு அசோக கல்லூரி அணிக் கெதிரான இனிங்ஸ் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் பிரிவு இரண்டிற்கான 19 வயது அணிகளுக்கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி கடந்த 12, 13ஆம் திகதிகளில் கொழும்புக் கோட்டை ஸ்ரீ ஜெயவர்த்தன மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய அசோக்க கல்லூரி அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து 259 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிப்புனா மிராஜ் ஆட்டமிழக்காது 78, மசிது மத்துரங்க 42, மிதுன் ரணவீர 45 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நோபேட் 60 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மற்றும் நிதர்சன், கிளிங்டன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மோறிஸ் 87, லிவிங்டரன் 64, ரியூடர் 38 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சண்டகபத்திரன 69 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

ஒரு ஓட்டம் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய அசோகக் கல்லூரி அணி, போட்டி நிறைவுக்கு வந்த வேளை சகல விக்கெட்டுக்களையும் இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சில்வா 25, பத்திரண 36 ஓட்டங்களைப் பெற்றனர். மிகச் சிறப்பாக பந்து வீசிய நோபேட் 44 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மற்றும் குகபாலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். முதல் இனிங்ஸில் சென் பற்றிக்ஸ் முன்னிலை பெற்றமையால் போட்டி விதிப்படி வெற்றி வழங்கப்பட்டது.

## சிநேகபூர்வ கால்பந்து

(யாழ்ப்பாணம்)

சென் ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணிக்கும் யாழ். கால்பந்தாட்ட மத்தியஸ்தர் அணிக்குமிடையிலான சிநேக பூர்வ கால்பந்துப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

## வெள்ளிப் பதக்கம்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்ட 23ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட வி.ஹரிகரன் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

இப்போட்டிகள் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

தட்டெறிதல் போட்டியிலேயே வி. ஹரிகரன் வெள்ளிப் பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்)

## கலாசார விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் இவ்வாண்டுக்கான முகாமைத்துவ பீடத்தின் முகாமைத்துவ வணிக மாணவர் கலாசார விளையாட்டு விழா இன்றைய தினம் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதன்போது பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாவதுடன் காலை 10.30 மணிக்கு முகாமைத்துவ இறுதியாண்டு மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் இடையிலான சிநேக பூர்வமான போட்டிகள் இடம்பெறும் என்றும், இதனை அடுத்து முகாமைத்துவ வணிக பீட மாணவர்களால் இரத்ததான நிகழ்வும் இடம்பெறும் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (எப்.எஸ்)

# கிரீடா சக்தி மூலம் தெரிவான முல்லை வீர, வீராங்கனைகள்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு பாடசாலை வீர, வீராங்கனைகள் கடந்த நான்காம் திகதி கிரீடா சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இனங் காணப்பட்டனர்.

கால்பந்து, ஹொக்கி, வலைப்பந்து, கரப்பந்து, கூடைப்பந்து, கபடி போன்ற விளையாட்டு நிகழ்வுகளுக்கு ஐந்து வீர, வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டனர். ஒவ்வொரு பிரிவிலும் தெரிவு செய்யப் பட்ட வீர,வீராங்கனைகளின் விபரம் வருமாறு:

**கால்பந்து**

ஆண்கள் :

கிருஷ்ணபாலன் விவியன் (மல்லாவி யோகபுரம் சி.சி.), அன்ரனி யேசுரட்ணம் ஸ்ரீ (முல்லைத்தீவு ம.வி.), சந்திரகுமார் மோகன்ராஜ் (சம்மலை ம.வி.), ஜெ. விதுஷன் (முல்லைத்தீவு ம.வி.), செல்வ ராசா சில்வேஸ்வரன் (கற்சிலைமடு ஜி.ரி.எம்.எஸ்)

பெண்கள் :

உபாலி உஷாந்தி (கற்சிலைமடு ஜி.ரி. எம்.எஸ்), எஸ். சிந்திவா (புதுக்குடியிருப்பு சி.சி.), எம். ஜெயவதனா (முல்லைத்தீவு ம.வி.), எம். அனுஜா, வி. க்ஜந்தினி (உடுப் புக்குளம் தமிழ் வித்தியாலயம்)

**ஹொக்கி**

ஆண்கள் :

வை. விதுசன் (மல்லாவி சி.சி.), எஸ். ஜனார்த்தன், எஸ். டர்வின்ராஜ் (மாங் குளம் ம.வி.), எம். துளக்ஷன் (பாலிநகர் ம.வி.), ரி. பார்த்தீபன் (திருமுருகண்டி இந்து வித்தியாலயம்).

பெண்கள் :

ரி. சிந்துஜா (மல்லாவி சி.சி.), எவ். லக்ஷி (மாங்குளம் ம.வி.), கு. தேனுஜா (மல்லாவி சி.சி.), ஜெ. ஜெனித்தா, எஸ். தர்சிகா (வித்தியானந்தா கல்லூரி)

**கரப்பந்து**

ஆண்கள் :

கே. வினுஜன் (மல்லாவி சி.சி.), கே. விதுஷன் (வித்தியானந்தாக் கல்லூரி), எஸ். தஷாந்தன் (விஸ்வமடு ம.வி.), ரி. ஜெசிந்தா (வன்னிவேளாங்குளம் ஜி.ரி. எம்.எஸ்.), கே. கதுர்ஷன் (வித்தியா னந்தாக் கல்லூரி)

பெண்கள் :

எஸ். பிரியா (உடையார்கட்டு ம.வி), பி. சிந்துஜா (மாங்குளம் ம.வி.), எஸ். தனுஷா ( வித்தியானந்தாக் கல்லூரி), ஏ. ஜதுனா, எஸ். சுதர்ஷனா (குமுழ முனை ம.வி.)

**வலைப்பந்து:**

ஏ. ஜஸ்மினா பெரேரா (முல்லைத்தீவு ம.வி.), ஜெ. விதுஷா (மாங்குளம் ம.வி.), ரி. துளசிகா (விஸ்வமடு ம.வி.), ஏ. ஜனுசியா (ஐயன்கன்குளம் ஜி.ரி.எம்.எஸ்), ரி. தனசுதா (சம்மலை ம.வி.)

**கபடி**

ஆண்கள் :

எஸ். சசிகரன் (கற்சிலைமடு ஜி.ரி. எம்.எஸ்.), எம். விவிதரன் (மாங்குளம் ம.வி.), ஜி. சாந்தரூபன் (கோட்டைகட்டிய குளம்), எம். மௌஸ் அன்ரனி (உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம்), ரி. விபூசன் (முல்லைத்தீவு ம.வி.)

பெண்கள் :

ரி. பேபி சாளினி (உடுப்புக்குளம் தமிழ வித்தியாலயம்), வி. மங்களேஸ்வரி (உடையார்கட்டு ம.வி.), பி. பானுஜா (வற் றாப்பளை ம.வி.), பி. கஸ்தூரி (உடை யார்கட்டு ம.வி.), ரி. பிரேமசொரூபி (சிலாவத்தை ம.வி.) (93)

## பாதாளத்தை நோக்கி மே.தீவுகள் கிரிக்கெட்



(போர்ட்ஒப்ஸ்பெயின்)

மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் தற்போது பாதாளத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது என அதன் முன்னாள் கப்டன் லாறா தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் தற்போது எந்த விதமான முன்னேற்றமும் இல்லாமல் உள்ளது. இளம் வீரர்களை அடையாளம் காண முடியவில்லை. தற்போதுள்ள அணி வெற்றி பெறுகிறது என்றால் அது உண்மையிலேயே ஆச்சரியமானது. போதுமான கட்டமைப்பு வசதி இல்லை. கிரிக்கெட் சபையின் மோசமான நடவடிக்கையால் பாதாளத்துக்கு சென்று கொண்டு இருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

# ராகுல் ராவிட் அசத்தல் சதம் வலுவான நிலையில் இந்தியா



(கொல்கத்தா)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வலுவான நிலையைப் பெற்றுள்ளது.

இந்திய-மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று கொல்கத்தாவில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது.

இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இந்திய அணி ராவிட்டின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான நிலையை அடைந்தது. நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இந்திய அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 346 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ராகுல் ராவிட் சதம் (119) பெற்றார். இது இவரின் 36ஆவது சதமாகவும், கொல்கத்தா மைதானத்தில் பெற்றுக் கொள்ளும் நான்காவது சதமாகவும் அமைந்தது. அத்துடன் அதிக சதம் கடந்த வீரர்கள் பட்டியலில் சச்சின், கலிஸ பொண்டிங்கிற்கு அடுத்த படியாக ராவிட் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆட்டமிழக்காது லக்ஸ்மன் 73, கம்பீர் 65, சேவாக், சச்சின் தலா 38 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சமி, பிஷோ தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

### பிராட்மன் வழியில் அஷ்வின்

இதேவேளை, திருமணமான மறுநாள் கிரிக்கெட் போட்டியில் விளையாடுவதன் மூலம், தமிழக வீரர் அஸ்வின், அவுஸ்ரேலிய கிரிக்கெட் மேதை சேர் பிராட்மன் வரிசையில் தானும் இணைந்துள்ளார். 1932ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் திகதி, சேர் பிராட்மன், சிட்னி செயின்ட் போல் சேர்ச்சில் ஜெசியை மணந்தார். மணமான மறுநாளே, கிரிக்கெட் போட்டியில் பங்கேற்றார்.

அதே வரிசையில், கொல்கத்தா டெஸ்டில் அஸ்வின் பங்கேற்றதன் மூலம், பிராட்மனின் புகழ்மிக்க பட்டியலில் இணைந்துள்ளார்.

## போபண்ணா ஜோடி சம்பியன்



மஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் ரோகன் போபண்ணா, பாகிஸ்தானின் குரேஷி ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில், இந்தியாவின் ரோகன் போபண்ணா, பாகிஸ்தானின் குரேஷி ஜோடி, பிரான்சின் ஜுலியன் பென்னடியு, நிகோலஸ் மஃஹத் ஜோடியை எதிர்கொண்டது. இதில் அபாரமாக ஆடிய போபண்ணா-குரேஷி ஜோடி 6-2, 6-4 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

## நட்பு ரீதியான கால்பந்து இங்கிலாந்து அணி வெற்றி



(லண்டன்)

உலக சம்பியன் ஸ்பெயின் அணிக்கு எதிரான நட்பு ரீதியிலான சர்வதேச கால்பந்து போட்டியில், இங்கிலாந்து அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

லண்டனில், இங்கிலாந்து-ஸ்பெயின் அணிகளுக்கு இடையிலான நட்பு ரீதியிலான சர்வதேசக் கால்பந்துப் போட்டி நடந்தது.

முதல் பாதியில் இரு அணி வீரர்களும் துடிப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த, கோல் எதுவுமின்றி சம நிலை வகித்தது.

பிற்பாதி ஆட்டத்தில் எழுச்சி கண்ட இங்கிலாந்து அணிக்கு 49 ஆவது நிமிடத்தில் பிராங்க் லம்பார்ட் ஒரு சிறப்பான கோல் அடிக்க, 1-0 என முன்னிலை பெற்றது.

எனினும் உலக மற்றும ஐரோப்பிய சம்பியன் ஸ்பெயின் அணியினரால் பதிலடி கொடுக்க முடியவில்லை. இதனால் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றி குறித்து இங்கிலாந்து கப்டன் குறிப்பிடுகையில், அடுத்த வருடம் இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கு சிறந்த பயிற்சி ஆட்டமாக இந்தப் போட்டி அமைந்தது. இதன் மூலம் இளம் வீரர்களுக்கு நல்ல உத்வேகம் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன்.

தொடர்ந்து எமது வெற்றியை தக்க வைத்துக்கொள்ள விரும்புகின்றோம் எனத் தெரிவித்தார்.

## பட்டம் வென்றார்




(பரிஸ்)


பரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் சம்பியன் பட்டத்தினை முதல் முறையாக சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் கைப்பற்றினார்.

பிரான்ஸின் ஜோ வில்பிரட் சொங்காவை 2-1 என்ற நேர் செட்கணக்கில் ரோஜர் பெடரர் வீழ்த்தினார்.

இதன்மூலம் பிரான்ஸ் மற்றும் பரிஸ் ரென்னிஸ் சம்பியன் பட்டங்களை வென்றெடுத்த இரண்டாவது வீரராக பெடரர் பதிவாகியுள்ளார்.

இந்த வெற்றியுடன் 18ஆவது மாஸ்டர்ஸ் ரென்னிஸ் சம்பியன் பட்டத்தினை ரோஜர் பெடரர் வென்றெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரண்டாவது டெஸ்டில் வோர்னருக்கு வாய்ப்பு?



(சிட்னி)

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் விளையாட, அவுஸ்ரேலிய அணியின் அதிரடி தொடக்க வீரர் டேவிட் வோர்னர் வாய்ப்பு பெற்றுள்ளார்.

கேப்டவுனில் நடந்த முதல் டெஸ்டில் வெற்றி கண்ட தென்னாபிரிக்க அணி 1-0 என முன்னிலை வகிக்கிறது. இரண்டாவது டெஸ்ட், வரும் 17ஆம் திகதி ஜோகனஸ்பேர்க் நகரில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. இதில் ஒரே ஒரு மாற்றம் மட்டும் செய்யப்பட்டுள்ளது. முதல் டெஸ்டின் போது முதுகுப் பகுதியில் ஏற்பட்ட காயத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மார்ஷ் நீக்கப்பட்டுள்ளார். இவருக்கு பதிலாக டேவிட் வோர்னர் சேர்க்கப்பட்டுள்ளார்.

இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான விளையாடும் 11 பேர் அணியில் வாய்ப்புக் கிடைக்கும் பட்சத்தில், டேவிட் வோர்னர் தனது டெஸ்ட் பயணத்தை தொடங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. நிச்சயம் விளையாடும் அணியில் இடம் கிடைக்கும் என வோர்னர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## கொழும்பில் நடைபெற்ற கோல்காப்பாளர் செயலமர்வு



(கொழும்பு)

கோல்காப்பாளர் பயிற்றுநர்களுக்கான சர்வதேச செயலமர்வொன்று நவம்பர் 08 முதல் 11 ஆம் திகதி வரை கொழும்பு கலதாரி ஹோட்டலில் இடம்பெற்றது.

பிரான்ஸ் மற்றும் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த சர்வதேச கால்பந்தாட்டச் சங்கங்களின் சம்மேளனத்தின் (பிபா) அதிகாரிகளால் இச்செயலமர்வு நடத்தப்பட்டது.

இதில் கோல் காப்பாளர்களின் முக்கியத்துவம் மற்றும் கோல் காப்பாளார்களின் நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டது.

இலங்கை, பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான், பூட்டான், மாலைதீவு, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 13 பயிற்றுநர்கள் இதில் கலந்துகொண்டனர்.

இச்செயலமர்வில் பங்குகொண்ட அனைவருக்கு பிபாவின் சான்றிதழ் வழங்கப்பட்டது.

## சமநிலையில் நிறைவடைந்த பாடுமீன்-ஹென்றிஸ் ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

பாடுமீன், சென் ஹென்றிஸ் அணிகளுக்கிடையிலான கால் பந்துப் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் சென் றோக்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் கால பந்துத் தொடரின் லீக் ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டி ஒன்றில் குருநகர் பாடுமீன் அணியும் சென் ஹென்றிஸ் அணியும் மோதின.

ஆரம்பம் முதலே இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்தன. முற்பாதி ஆட்டத்தின் 8ஆவது நிமிடத்தில் பாடுமீன் வீரர் அ. டிலிப் ஒரு கோலையும், 27ஆவது நிமிடத்தில் சென் ஹென்றிஸ் வீரர் செ. ஞானரூபன் ஒரு கோலையும் போட்டனர்.

இறுதியில் 1-1 என்ற கோல் கணக்கில் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இதேவேளை, இன்றைய தினம் 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து ஹென்றிஸ் அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே நடைபெற்ற விலகல் முறையி லான சுற்றில் 29 அணிகள் பங்கு பற்றியதாகவும், இதிலிருந்து தெரிவான நான்கு அணிகளுக்கு மிடையிலான லீக் ஆட்டங்கள் தற்போது நிறைவுக்கு வரவுள்ளதாகவும், இதில் புள்ளிகள் அடிப்படையில் முதலிரு இடங்களைப் பிடித்துக் கொள்ளும் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி யைப் பெற்றுக்கொள்ளுமென போட்டி ஏற்பாட்டாளர்கள் தெர வித்தனர்.

அத்துடன் இறுதிப் போட்டியை சிறப்பான முறையில் நடத்துவதற்கான ஒழுங்குகள் யாவும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (எப்.எஸ்)

# கடற்படையினரால் மூன்று மாணவர்கள் தடுத்துவைக்கப்பட்டதாக மேன்முறையீடு



(கொழும்பு)

லண்டன் பல்கலைக்கழக கல்லூரியில் கற்பதற்காக நாட்டைவிட்டுச் செல்லவிருந்த மாணவரும் ஏனைய க.பொ.த. உயர்தர மாணவர்கள் இருவரும் கடத்தப்பட்டு, கடற்படையினரால் தடுத்துவைதத்துள்ளதாக மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாணவர்களை நீதிமன்றில் ஆஜராக்குமாறு கோரி அவர்களின் பெற்றோர்கள் தனித்தனியாக 3 ஆட்கொணர்வு மனுக்களை மேன்முறையீட்டு நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை தாக்கல் செய்தனர். திருமதி சரோஜா நாகநாதன் தனது மகனை ரஜீவ் நாகநாதனையும் ஜி.விஸ்வநாதன் தனது மகன் பிரதீப்பையும் திருமதி காவேரி ராமலிங்கம் தனது மகன் திலககேஸ்வரையும் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துமாறு கோரி இம்மனுக்களை தாக்கல் செய்தனர். இவர்கள் அனைவரும் கொட்டாஞ்சேனையை சேர்ந்தவர்களாவர்.

இம்மாணவர்கள் திருமலை கடற்படைத் தளத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக தாம் நம்புவதாகவும் அவர்களின் பெற்றோர்கள் குறிப்பிட்டுள்ளனர் சட்டத்தரணி கௌரிசங்கரி தவராஜாவுக்கூடாக தாக்கல் செய்யப்பட்ட இம்மனுக்களில் கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் டி.டபிள்யூ. ஏ.எஸ். திசாநாயக்க, பொலிஸ்மா அதிபர் இலங்ககோன், சட்டமா அதிபர் ஈவா வனசுந்தர ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

லண்டன் பல்கலைக்கழக கல்லூரியல் ரஜீவ் நாகநாதன் அனுமதி பெற்றதையடுத்து அவரின் தந்தை 2008 செப்டெம்பர் 17ஆம் திகதி தனது இல்லத்தில் விருந்தொன்றை ஏற்பாடுசெய்ததாகவும் ரஜீவின் நண்பர்களான திலகேஸ்வரன், பிரதீப், டிலான் மொஹமட் ஆகியோர் இதில் கலந்துகொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பின் வெளியே சென்ற மேற்குறிப்பிட்ட ரஜீவ், திலகேஸ்வரன், பிரதீப் மூவரும் மறுநாள் 18 ஆம் திகதிவரை வீடு திரும்பவில்லை. இதனால் அவர்களின் பெற்றோர்கள் கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

2009 ஜனவரி மாதம் ரஜீவின் தந்தையை தொலைபேசியில் அழைத்த நபர் தன்னை சந்திம என அடையாளப்படுத்திக் கொண்டு, ரஜீவும் அவரின் நண்பர்களும் மன்னாரில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களை விடுவிப்பதற்கு 25 இலடசம் ரூபா வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

2009 பெப்ரவரியில் நந்தகுமார் என தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட ஒருவர் தொலைபேசியில் அழைத்து இம்மாணவர்கள் மட்டக்களப்பில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

இம்மாணவர்கள் ஆரம்பத்தில் கொழும்பு சைத்திய வீதியிலுள்ள வீடொன்றில் தடுத்துவைக்கப்பட்டதாகவும் பின்னர் திருகோணமலை கடற்படைத் தளத்துக்கு மாற்றப்பட்டதாகவும் மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

இம் மாணவர்கள் கைது செய்யப்பட்டமைக்கும் தடுத்துவைக்கப்பட்டமைக்கும் காரணம் கூறப்படவில்லை எனவும் அவர்கள் கடற்படைச் சட்டத்தின் கீழ் கையாளப்படவோ கடற்படையினால் தடுத்துவைக்கப்படவோ வேண்டியவர்கள் அல்லர் எனவும் மனுதாரர்கள் கூறியுள்ளனர்.

## கடத்தப்பட்ட வர்த்தகர் கண்டுபிடிக்கப்பட்டார்

(கொழும்பு)

நுகேகொடை ஜுபிலி மைல்கல் பகுதியில் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட வர்த்தகரை கண்டுபிடித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கிடைக்கப்பெற்ற தொலைபேசித் தகவலின் பேரில், நேற்றுமுன்தினம் இரவு ஒன்பது மணியளவில் வர்த்தகர் கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

பிட்டகோட்டே பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதான ஒருவரே கடத்தப்பட்டதாக பொலிஸார் கூறினர். தனது வர்த்தக நிலையத்தை இரவு மூடிவிட்டு மேலும் இரண்டு பேருடன் உரையாடிக் கொண்டிருந்த போதே வர்த்தகர் கடத்தப்பட்டுள்ளார்.

வெள்ளை நிற வானில் வந்த ஆறு பேர் ஆயுத முனையில் வர்த்தகரை கடத்திச் சென்றதாக பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

## சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம்



(கொழும்பு)


இவ்வருடத்தின் முதல் 9 மாதங்களில் சிறார்கள் தொடர்பான 258 பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்கள் மற்றும் சிறுமிகள், பெண்களைப் பாலியல் தொழிலுக்கு நிர்ப்பந்தித்த 21 சம்பவங்களை பொலிஸார் இனங்கண்டுள்ளதாக நாடாளுமன்றத்தில் கடந்தவாரம் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பபட்ட ஆவணங்களின்படி, கடந்த வருடம் பெண்களை பாலியல் தொழிலுக்கு நிர்ப்பந்தித்த 31 சம்பவங்கள் பதிவுசெய்யப்பட்டன. இந்த எண்ணிக்கை 2009 இல் 33 ஆகவும் 2008 இல 30 ஆகவும் 2007 இல் 35 ஆகவும் 2006 இல் 15 ஆகவும் 2004 இல் 16 ஆகவும் இருந்தது.

அதேவேளை கடந்த வருடம் சிறுவர்கள் மோசமாக நடத்தப்பட்ட மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட 334 சம்பவங்கள் பதிவுசெய்யப்பட்டன. 2009 ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 346 ஆக இருந்தது. 2007 இல் 366 சம்பவங்களும் 2007 இல் 263 சம்பவங்களும் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

எனினும் 2005 இல் இச்சம்பவங்களின் எண்ணிக்கை 451 ஆகவும் 2004 இல் 471 ஆகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இக் குற்றச்செயல்களின் அதிகரிப்புத் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. இந்த அபாயப்போக்கை கட்டுப்படுத்துவதற்கு புதிய சட்டங்கள் ஏற்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சியினர் வலியுறுத்தினர்.

## இத்தாலியில் நெருக்கடிக்குள்ளாகியுள்ள இலங்கையரை காப்பாற்றக் கோரிக்கை



(கொழும்பு)

இத்தாலியில் தொழிலில்லாமலும், சட்ட பூர்வமான ஆவணங்கள் இன்மையினாலும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ள இலங்கையர்கள மீது கவனம் செலுத்தும்படி இலங்கைக்கான இத்தாலியத் தூதுவருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இம் மக்களது பிரச்சினைகள் தொடர்பில் இத்தாலிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இராஜதந்திர நடவடிக்கைகள், மற்றும் சினேகபூர்வமான அணுகுமுறைகளினாலும் இவற்றைத் தீர்த்துவைக்க வேண்டும் என இத்தாலிக்கான இலங்கைத் தூதுவருக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இத்தாலி வாழ் இலங்கையர்கள் தொடர்புபட்ட மட்டில் பாரிய சவாலும் பெரும் பொறுப்பும் உள்ளது. அவர்களுடைய அபிலாசைகளையும், தேவைகளையும் தாங்கள் பூர்த்தி செய்ய வேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தினை ஜயலத் ஜயவர்த்தன அனுப்பியுள்ளார். இத்தாலி வாழ் இலங்கையர்களின் பூரண விபரங்களடங்கிய கணக்கெடுப்பொன்றினையும், நடத்தும்படி இத்தாலிக்கான புதிய இலங்கைத் தூதுவர் அசித்த பெரேராவிடம் ஜயலத் ஜயவர்த்தன கேட்டுக்கொண்டுள்ளார்.

## திடீர் விபத்துக்களைத் தடுக்க மக்களைத் தெளிவுபடுத்தும் வாரம்

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள திடீர் விபத்துக்களை தவிர்ப்பதற்காக மக்களை தெளிவுபடுத்தும் வாரம நேற்று ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 20 ஆம் திகதி வரை இந்த வாரம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக மக்களை தெளிவுபடுத்துவதே இந்த வாரத்தின் முக்கிய நோக்கமாகும். குறிப்பாக வீதி விபத்துக்கள் காரணமாக நாளொன்றுக்கு ஆறு பேர் வீதம் உயிரிழக்கின்றனர்.

வீதி விபத்துக்கள் மூலம் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் சர்வதேசத் தினமாக நவம்பர் மாதம 20 ஆம் திகதி முதல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிககாட்டினார். இதனை முன்னிட்டு, வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கான தெளிவூட்டல் நடவடிக்கைகள் இந்த ஒருவார காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன என்றார்.

## ரிஸானாவைப் பார்வையிட இலங்கைக் குழு பயணம்

(கொழும்பு)

சவூதி அரேபியாவில் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ரிஸானா நபீக்கை சந்திப்பதற் காக அவரின் பெற்றோர் அங்கு பயணமாகியுள்ளனர். ரிஸானாவின் பெற்றோருடன், அரசாங்கப் பிரதிநிதிகள் சிலரும் சவூதி நோக்கிச் செல்லவுள்ளதாக சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைப் பிரதிநிதிகள் குழுவில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க, வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மறறும் நலன்புரி அமைச்சின் செயலாளர் நிஸ்ஸங்க விஜேரத்ன ஆகியோரும் அடங்குகின்றனர். இவர்கள் இன்றைய தினம் ரிஸானாவைச் சந்திப்பதற்காக, அவர தடுத்துவைக்கப்பட்டுள்ள சிறைக்குச் செல்லவிருப்பதாக சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

## ரோகண விஜயவீரவின் கொள்கையை திரிபுபடுத்தும் கிளர்ச்சிக் குழுவினர்

(கொழும்பு)

ஜே.வி.பி.யின் கிளர்ச்சிக் குழு உறுப்பினர்கள் அனைவரும் கொள்ளையர்கள் என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.போட்டோ பிரதி இயந்திரம் உள்ளிட்ட கட்சியின் சொத்துக்களை கிளர்ச்சியாளர்கள் கொள்ளையிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ரோஹண விஜேவீரவின் 22ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித துள்ளார். ரோஹண விஜேவீரவின் கொள்கைகளை கிளர்ச்சியாளர்கள் திரிபுபடுத்த முயற்சித்து வருகின்றனர். கட்சியின் பௌதீக சொத்துக்கள் கொள்ளையிடப்படுவது பற்றி கவலையில்லை.

கம்பஹா பிரதேசத்தில் கிளர்ச்சிக்குழு உறுப்பினர்கள் பன்றிகளை களவாடியுள்ளனர். இந்தப் பன்றிகளை தமது குழுவில் இணைத்துக் கொள்ள அவர்கள் முயற்சி மேற்கொண்டிருக்கலாம். எனினும், ரோஹண விஜேவீரவின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் இல்லாதொழிக்க இடமளிக்க முடியாது.

கள நிலைமைகளுக்கு ஏற்ப சோசலிச கோட்பாடுகளில் மாற்றம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே ரோஹணவின் சித்தாந்தமாக அமைந்தது. பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராகப் போராடும் நோக்கில் சோசலிசக் கட்சிகளுடன் கூட்டு வைத்துக்கொள்ள ரோஹண விஜேவீர விரும்பியதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.





பதில் அதிபர்களாக கடமையாற்றும் அதிபர்களை சேவையில் நிரந்தரமாக்கக் கோரி அகில இலங்கை பதில் அதிபர்கள் சங்கம் நேற்று இசுருபாயவிலுள்ள கல்வி அமைச்சுக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததைப் படத்தில் காணலாம்.

## இலங்கை வர்த்தகக் குழு வியட்நாமிற்குப் பயணம்

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த வர்த்தகக் குழுவொன்று நேற்றுமுன்தினம வியட்நாமிற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. அண்மையில் வியட்நாமிய ஜனாதிபதி இலங்கை வந்திருந்த போது அவருடன் வருகை தந்திருந்த வியட்நாமிய வர்த்தகக் குழுவின் அழைப்பிற்கு அமையவே இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் தலைவர் ரொஹான் தலுவத்தவின் தலைமையிலான இந்தக் குழுவில் 18 வர்த்தகர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். ஆறு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு வியட்நாம் செல்லும் இவர்கள் வியட்நாமிய ஜனாதிபதி மற்றும் உயர்மட்ட வர்த்தகக் குழுவினருடன் சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளனர். அதேவேளை தற்போது இலங்கை இறப்பர் பொருட்கள், இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களை வியட்நாமிற்கு ஏற்றுமதி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வீட்டினுள் புதையல் தோண்டியவர்கள் கைது

(கொழும்பு)

கலேவெல நீலகல பகுதி வீடொன்றில் புதையல் தோண்டிக்கொண்டிருந்த போது ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வீதிப் புனரமைப்புப் பணியில் ஈடுபடும் போர்வையில் புதையல் தோண்டுவதற்காக இந்தப் பிரதேசத்திற்கு இவர்கள் வந்துள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர்கள் கிரிபத்கொட, கடவத்தை, பொலன்னறுவை மற்றும் அவிஸ்ஸாவளை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது. சந்தேக நபர்கள் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

# வேலை வாய்ப்பு வேண்டும் இல்லையேல் போராட்டம்

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் தமக்குத் தொழில் வாய்ப்பைப் பெற்றுத்தரும்படி வடமாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுக்க உள்ளனர்.

தமக்குத் தொழில் வாய்ப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் தாம் உண்ணாவிரதப் போராட்டம் செய்யவுள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

யாழ்.பெருமாள் கோவிலில் நேற்றுக்காலை 11.00 மணியளவில் யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்று கூடியதுடன் தமது சங்கத்துக்கான புதிய நிர்வாகக் குழுவையும் தெரிவு செய்தனர்.

அத்துடன், வேலையற்ற பட்டதாரிகளாக தாம் தொடர்ந்தும் இருப்பது தமக்கு விரக்தியையும், வேதனையையும் அளிப்பதாகத் தெரிவித்தனர். வேலை தமது உரிமை என்றும் உரிமையைக் கேட்கும் முயறசியில் தாம் இறங்கவுள்ளோம் என்றும், இனிவரும் காலங்களில் தாம் தாமதிக்கப் போவதில்லை. எங்கள் கருத்துக்களை ஆளுநரிடம் தெரிவிப்போம். ஆளுநர் எங்கள் கருத்துக்களை ஏற்றுத் தீர்வு பெற்றுத்தர வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.

தமது கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வராவிட்டால் தாம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் என்றும், வேலையற்ற பட்டதாரிகள் தெரிவித்தனர்.

சுமார் 150 இற்கும் மேற்பட்ட வேலையற்ற பட்டதாரிகள் இந்த ஒன்றுகூடலில் கலந்து கொண்டு தமக்கு வேலை பெற்றுத் தரும் வரை இனிவரும் காலங்களில் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்தனர். (எஸ்)

# கிளிநொச்சி வலய மாணவர்கள் கொழும்பில் விஞ்ஞானச் சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கிராமப்புறப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் விஞ்ஞான அறிவியல் ரீதியான மனோபாவத்தினை அதிகரிக்கும் நோக்குடன் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் அனுசரணையுடன் கொழும்பில விஞ்ஞான ரீதியான முக்கிய இடங்களை பார்வையிடுவதற்கான சுற்றுலா இடம்பெற்றுள்ளது.

முதலாவது தொகுதி மாணவர்கள் கிளிநொச்சி கல்வி வலயத்தில் இருந்து தெரிவு செய்யபட்டார்கள். இக்குழுவில் இந்துக் கல்லூரி, திருவையாறு மகாவித்தியாலயம், பிரமந்தனாறு மகாவித்தியாலயம், சிவநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, புன்னை நீராவி அரசினர் தமிழ்க கலவன் பாடசாலை, கனகாம்பிகைக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் இருந்து 235 மாணவர்களும், 12 ஆசிரியர்களும், ஒரு உத்தியோகத்தரும் இதில் பங்கு பற்றியிருந்தார்கள்.

இக் கல்விச்சுற்றுலா கடந்த நவம்பர் 7ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை இடம்பெற்றது. இக்குழுவினர் கைத்தொழில், தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் தேசிய மிருகக் காட்சிச்சாலை ஆகியவற்றினை பார்வையிட்டனர்.

# தபால் மா அதிபர் பதவியில் நீடித்தால் கடும் தொழிற் சங்க நடவடிக்கை

## தபால் தொழிற் சங்கங்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

குற்றவாளியாகக் காணப்பட்டுள்ள தபால் மா அதிபர் தனது பதவியில் தொடர்ந்தும் இருப்பாரானால் கடும் தொழிற் சங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தபால் தொழிற் சங்கம் எச்சரித்துள்ளது.

16 வகையான குற்றச்சாட்டுகளில் குற்றவாளியாகக் காணப்பட்ட தபால் மா அதிபர் தொடர்ந்து அந்தப் பதவியில் நீடிப்பது குறித்து தாபல் தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. தபால் மா அதிபருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள 26 குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட மூவரடங்கிய குழு, 16 குற்றச்சாட்டுக்களில் அவர் குற்றவாளி என உறுதிசெய்துள்ளதாக தபால் தொழிற்சங்க ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார குறிப்பிட்டார்.

தபால் மா அதிபருக்கு எதிராக அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில், கடும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவிருப்பதாக அவர் எச்சரித்துள்ளார்.

# இறந்த பெண்ணினுடைய உள்உறுப்புக்கள் அகற்றப்பட்டமை குறித்து விசாரிக்கப்படும்

## குவைத்துக்கான இலங்கைத் தூதுவர்

(கொழும்பு)

குவைத்தில் உயிரிழந்த இலங்கைப் பணிப்பெண் ஒருவரின் உடல் உறுப்புக்கள் சில அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் விஷேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டிற்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. இந்த விடயம் குறித்து குவைத் அதிகாரிகளைத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுப்பதாக குவைத்துக்கான இலங்கைத் தூதுவர் பிரேமரத்ன தெரிவித்தார்.

கொக்கிராவை, விஜிதபுர பகுதியைச் சேர்ந்த 28 வயதான பணிப்பெண் ஒருவரே உயிரிழந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னரே இந்தப் பெண் குவைத்தில் வீட்டுப் பணிப் பெண்ணாகத் தொழில் வாய்ப்பினைப் பெற்றுச் சென்றுள்ளார.

இந்தப் பணிப்பெண் உயிரிழந்து 15 நாட்களின் பின்னரே அவரின் சடலம் நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அது குறித்த பிரேதப் பரிசோதனை நடத்தப்படவில்லை என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளதாக அவரின் குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். இதன் பின்னர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சடலம் குறித்த மரண விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இது தொடர்பாக சட்ட வைத்திய அதிகாரி விடுத்துள்ள அறிக்கையில் இலங்கைப் பணிப்பெண்ணின் உடல் உறுப்புகள் சில அகற்றப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டபபட்டுள்ளது. எவ்வாறாயினும் பணிப் பெண் உயிரிழந்தமை குறித்து எந்தவொரு தரப்பினராலும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்று அந்தப் பெண்ணின் சகோதரர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து விசாரணைகளின் பின்னர் உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவரும், சட்டத்தரணியுமான கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

# முதலீட்டாளர்கள் இலங்கை வருவதில் அவதான நிலைமை ஏற்பட்டுள்ளது

## பொருளியல் நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட குறைந்த செயற்பாடுடைய தொழில் முயற்சிகள் மற்றும் குறைந்த பயன்பாடுடைய சொத்துக்களுக்கு புத்துயிர் அளித்தல் சட்டம் காரணமாக முதலீட்டாளர்கள் இலங்கை வருவதில் அவதான நிலைமை ஏற்படலாம் என பொருளியல் நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்தச் சட்டத்தின் மூலம் தனியார் தொழில் முயற்சிகளைப் பொறுப்பேற்பதற்கான சமிக்ஞை தென்படுவதாக கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் ஆய்வுப் பிரிவு விரிவுரையாளர் கலாநிதி ஏ.கணேஷமூர்த்தி தெரிவித்துள்ளார். புதிய சட்டத்திற்கு அமைவாக நிறுவனங்கள் பொறுப்பேற்கப்பட்ட பின்னர், அவை குறித்து மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பில் அதில் உரியவாறு குறிப்பிடப்படவில்லை என்று ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், பொருளியல் விஞ்ஞான பேராசிரியருமான ஜகத் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

# போலி நாணயங்களுடன் கைது

(கொழும்பு)

போலி நாணயத்தாள்களுடன் சந்தேகநபர் ஒருவர் காலிப் பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.அத்துடன் சந்தேகநபரிடம் இருந்து ஒன்பது போலி நாணயத்தாள்களும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இறக்குவானை ஓபட பகுதியைச் சேர்ந்த 62 வயதான ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர் இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# வடமராட்சி கிழக்கில் பரீட்சைக் கட்டணமில்லை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 11 பாடசாலைகளில் தரம் 1 தொடக்கம் க.பொ.த.சாதாரணம் வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கு மூன்றாம் தவணைப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இம் மாணவர்களின் நலன்கருதி பரீட்சைக் கட்டணம் அறவிட வேண்டாம் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா பாடசாலை அதிபர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள குடும்பங்கள் தற்போதுதான் தமது தொழில் முயற்சிகளை ஆரம்பித்து வருகின்றனர். எனவே அக்குடும்பங்களின் நன்மை கருதியும், மாணவர்களின் நன்மை கருதியும் இம்முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(116)






தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு சாவகச்சேரி நகராட்சி மன்ற சாவகச்சேரி, நுணாவில், மீசாலை பொது நூலகங்கள் இணைந்து நடத்திய புத்தகக் கண்காட்சி நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனையும், சாவகச்சேரி நகராட்சி மன்றத் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை நாடாவெட்டி புத்தகக் கண்காட்சியினை ஆரம்பித்து வைப்பதனையும், அருகில் பிரதம நூலகர் இ.வித்தியானந்தன் நிற்பதனையும் காணலாம். (11)

# கம்யூனிஸ்ட் சிவதாசன் காலமானார்!



இலங்கை இடதுசாரி தலைவர்களுள் ஒருவரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மூத்த உறுப்பினரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இரண்டுமுறை பதவி வகித்திருந்தவருமான தோழர் சிவதாசன் அவர்கள், நேற்றுமுன்தினம் மாலை தனது 77வது வயதில் இயற்கை எய்தியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் 2006 இல் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் தெய்வாதீனமாக உயிர் தப்பியிருந்தும் தொடர்ந்து நோய்வாய்ப்பட்டிருந்த தோழர் சிவதாசன் அவர்கள் ஏறத்தாழ 50 வருட கால அரசியல் வரலாற்றைக் கொண்ட விரல்விட்டு எண்ணக்கூடிய தமிழ் இடதுசாரி அரசியல் தலைவர்களுள் ஒருவர் என்பதுடன் அறுபதுகளின் பிற்பகுதியில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி முன்னெடுத்திருந்த பல ஆயுத அரசியல் போராட்டங்களின் முன்னோடிகளுள் ஒருவருமாவார். இலங்கையின் மூன்று மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்த சிறந்த மொழி பெயர்ப்பாளருமான தோழர் சிவதாசன் அவர்கள் இறக்கும்வரையில் இலங்கையின் ஒடுக்கப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்களின் விமோசனத்திற்காக அயராது குரல்கொடுத்துவந்திருந்த ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது மாணவப் பருவத்திலேயே இடதுசாரி அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்த தோழர் சிவதாசன் அவர்கள், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து கொண்டு வடக்கு கிழக்கில் நிகழ்ந்த பல்வேறு அரசியல் போராட்டங்களில் பங்குபற்றி பல்வேறு சந்தர்ப்பங்களில் சிறைக்கும் சென்றவராவார்.

தோழர் சிவதாசன் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்திருந்த காலத்தில் தொழிற் சங்கப் பணிகளில் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் பணியாற்றியவர். இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் பிரதிநிதியாக இலங்கைப் போக்குவரத்துச் சபை, தோட்டத் தொழிலாளர்கள் சங்கம், காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை போன்றவற்றில் தொழிற்சங்கங்களைக் கட்டியெழுப்பியதுடன், அந்த அமைப்புகளின் தொழிற்சங்க உரிமைகளுக்காகவும், தொழிலாளர்களது நலன்களுக்காகவும் அயராது போராடியவர். இவற்றிற்கும் மேலாக இலங்கை தொழில் நீதிமன்றத்தில் இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் பிரதிநிதியாக வாதாடி, தொழிலாளர்களுக்கு பல வெற்றியையும் ஈட்டிக் கொடுத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து பணியாற்றிய காலத்தில் பிரபல அரசியல் தலைவர்களாக விளங்கிய தோழர்கள் டொக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க, பீற்றர் கெனமன், கே.பி.சில்வா போன்றோருடனும், கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபட்டதின் பின்னர் தோழர் என்.சண்முகதாஸனுடன் இணைந்து பணியாற்றிய சமயம், தோழர்களான பிரேம்லால் குமாரசிறி, எஸ்.டி.பண்டாரநாயக்க போன்றவர்களுடனும், வடபகுதியில் சகலரது நன்மதிப்பையும் பெற்றிருந்த கம்யூனிஸ்டுகளான தோழர் மு.கார்த்திகேசன், தோழர் வி.ஏ.கந்தசாமி ஆகியோருடனும் இணைந்து பணியாற்றியவர். இக்காலகட்டத்தில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தால் முன்னெடுக்கப்பட்ட பல போராட்டங்களுக்குத் தலைமை தாங்கி வழிநடாத்திய போராட்ட வரலாறும் தோழர் சிவதாசனுக்குரியது.

தோழர் சிவதாசன் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் இணைந்து செயற்பட்டபோது 1986ம் ஆண்டில் புலிகளால் தடுத்துவைக்கப்பட்டு மிகவும் கடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டதுடன், நீண்ட காலமாகச் சிறை வைக்கப்பட்டிருந்தார். புலிகளது பிடியிலிருந்து தப்பி வந்த அவர், தனது நெருக்கமான சகாக்களுடன் பல கிராமங்களில் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டு, புலிகளது ஜனநாயக மறுப்புக்கு எதிராகவும், மக்கள் மீதான அடக்குமுறைகளுக்கு எதிராகவும் மக்களை அணி திரட்டுவதில் தனது உயிரையும் துச்சமென மதித்துச் செயற்பட்டிருந்தார்.

இந்திய, இலங்கை ஒப்பந்தததின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபையில் மக்கள் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டு, வடக்குக் கிழக்கு மக்களின் ஜனநாயக உரிமைகளை நிலை நாட்டுவதிலும், இலங்கை இனப் பிரச்சினையின் இறுதித் தீர்வுக்கு, இந்தியாவின் உதவியும், ஒத்தாசையும் அவசியம் என்பதை உணர்ந்து செயலாற்றியவர் என்பதுடன் தோழர் பத்மநாபாவின் அன்பிற்கும், நம்பிக்கைக்கும் உரியவராகவும் இருந்தார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இரு தடவைகள் தெரிவு செய்யப்பட்டு அக்கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவராகவும் இருந்து மக்கள் பணியாற்றியிருந்த தோழர் சிவதாசன் அவர்கள், பின்னர் பனை அபிவிருத்திச் சபையின் தலைவராகவுமிருந்து சபையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார்.

தற்போது இலங்கை அமைச்சரவையில் கைத் தொழில் அபிவிருத்தி அமைச்சராகவுள்ள தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தந்தையாராகிய திரு கதிரவேல் அவர்கள் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக இருந்த போது தோழர் சிவதாசன் அவர்களும் இணைந்து பணியாற்றியிருந்து, பின்னாளில் தோழர் கதிரவேல் அவர்களின் சகோதரியையே தனது வாழ்க்கைத் துணைவியாகவும் ஏற்றிருந்தார்.

மனிதநேயப்பண்பு, பன்மைத்துவ அரசியல் கோட்பாடு இவைகளோடு புலிகளின் தவறான வழிமுறைக்கு எதிராக இடைவிடாது குரல்கொடுத்து வந்திருந்த தோழர் சிவதாசன் அவர்கள், ஏழை மக்களின் இயல்பு வாழ்க்கை குறித்த நாளாந்த பிரச்சினைக்கான தீர்வு தொடக்கம் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கான இறுதித்தீர்வு வரை அதிக அக்கறையோடு செயலாற்றியிருந்த நிறைவான நீண்ட அரசியல் வரலாறு கொண்டவர். அவரது மறைவு தமிழ் மக்களுக்கு, குறிப்பாக தமிழ் இடதுசாரி இயக்கத்திற்கும், இலங்கையிலுள்ள ஒடுக்கப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட ஏழை மக்களுக்கும் பேரிழப்பாகும்.

# மாநகர சபை அபிவிருத்திக்கான கிராம மட்டக் கலந்துரையாடல்



யாழ். மாநகரசபை அபிவிருத்திக்கான ஜே/61 கிராமமட்டக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு குறித்த கிராம சேவகர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இக்கலந்துரையாடலில் யாழ். மாநகரசபையின் சேவைகள் பற்றி விளக்கத்தை சபை பொறியியலாளர் எஸ்.எச்.கெண்டர்சன் வழங்கினார். தொடர்ந்து கிராம சேவையாளர் பிரிவில் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் திட்டமிட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடாபான பார்வையும், சபையின் வரவு - செலவுத் திட்டம் பற்றிய விளக்கமும் இடம்பெற்றது.

மேலும் இந்நிகழ்வில் இப்பிரச்சினைகள் ஜனநாயக ரீதியாக இனங்காணும் சிறு தேர்தல் ஒன்றும் நடத்தப்பட்டதாகவும், அதில் அடிப்படைப் பிரச்சினையாக குடிநீர்ப் பிரச்சினை முன் வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் முதல்வரின் செயலாளர் மாநகரசபை உறுப்பினர்கள், அப்பகுதி கிராம மக்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள், கிராம சேகவர், மாதர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர், ஜெசாக் தன்னார்வத்தொணடு நிறுவனப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# வன்னிப் பகுதி வைத்தியசாலைகளுக்கு அம்புலன்ஸ் வண்டிகள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் வைத்தியசாலைகளுக்கு ஒருதொகுதி மருத்துவ வாகனங்கள் நேற்றைய தினம் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

யுனிசெப் நிறுவனத்தினால் வடபகுதி வைத்தியசாலைகளின் மேம்பாட்டிற்கென வழங்கப்பட்ட இந்த மருத்துவ வாகனங்களை நேற்றைய தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற வட மாகாண சுகாதார அமைச்சின் நிகழ்வில் வைத்தே வடமாகாண ஆளுநர் வழங்கியுள்ளார்.

முல்லைத்தீவு வைத்தியசாலைக்கான இரண்டு அம்புலன்ஸ் வண்டிகள், மன்னார் வைத்தியசாலைக்கு ஒரு அம்புலன் வண்டி மற்றும் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மருத்துவப் பொருட்களைக் காவிச் செல்லும் லொறி என்பனவே இவ்வாறு வட மாகாண ஆளுநரினால் வழங்கப்பட்டுள்ளது.

வன்னிப்பகுதியில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய வைத்தியசாலைகள் கடந்த யுத்தத்தில் மோசமாகச் சேதமடைந்திருந்ததும் அந்த வைத்தியசாலைகள் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டு அப்பகுதியின் வைத்தியசேவை மேம்படுத்தப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (பா)

# இரவு நேர வைத்தியர் இன்றி நோயாளர்கள் பெரும் அவதி

(சங்கானை)

அராலி, கோட்டைக்காடு பிரதேச வைத்திய சாலையில் இரவு நேரங்களில் வைத்தியர்கள் எவரும் கடமையில் இல்லாதிருப்ப தால், வைத்திய சேவைகளைப் பெறுவதில் அப்பிரதேச மக்கள் பெரும சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரவுவேளைகளில் திடீர் சுகவீனங்கள் மற்றும் ஆபத்தான நிலைமைகளில் நோயாளிகளைக் குறித்த வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் போது அங்கு இரவு நேர வைத்தியர்கள் கடமையில் இல்லாதிருப்பதால் ஏமாற்றத்துடன் நீண்ட தூரத்தில் உள்ள சங்கானை, தெல்லிப்பளை, அரசினர் வைத்தியசாலைகளுக்கோ, அல்லது யாழ். போதனா வைத்தியசாலைககோ எடுத்துச் செல்ல வேண்டி இருப்பதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளதுடன், இவ் வைத்திய சாலைகளுக்கு நோயாளிகளை எடுத்துச செல்லும்போது ஏற்படும் காலதாமத்தால் உயிரிழபபுக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் மேற்படி ஆதார வைத்திய சாலைக்கு இரவு நேரக் கடமைக்கு வைத்தியர் ஒருவரை நியமித்து உதவுமாறு சம் பந்தப்பட்ட அதிகாரிகளை அப்பிரதேச மக்கள் கேட்டுக் கொள்கின்றார்.

# தமிழர்கள் குறித்து அக்கறை கொண்டுள்ளவர்களோடு...


இன்றுள்ள பிரச்சினை இனவாதம் அல்ல. ஒவ்வொருவரின் உரிமைகள் தொடர்பில் முன்னிற்பதும், அதற்காகப் பாடுபடுவதும் எவ்வாறு என்பதே பிரச்சினையாக உள்ளது.

தமிழர்களுக்கு சிங்களவர்களும், சிங்களவர்களுக்கு தமிழர்களும் உதவக்கூடிய நிலைமையை உருவாக்க வேண்டியுள்ளது. வடக்கிறகு மாகாணசபை தேவை. இது இன்றுள்ள ஜனநாயக நிகழ்ச்சி நிரலில் உள்ள அவசியமான நிபந்தனையாகும். வழங்கப்படும் மாகாணசபையில் நிலவும் அதிகாரங்கள் என்பது இரட்டை விடயமாகும்.

இதற்காக தமிழ் அரசியல் போராட வேண்டியுள்ளது. எனினும், ஆரம்ப கால விடயங்கள் மற்றும் இரட்டை விடயங்கள் குறித்து தமிழ அரசியல் அறிந்துகொள்ள வேணடும்.

வடக்கில் மாகாண சபையினை அமைத்து, அதிகாரங்களைக் கோரும் போராட்டத்திற்கு நாட்டின் பிற மாகாணசபைகளின் பிரதிநிதிகளும் ஒன்றிணையக் கூடும். அப்பொழுது அது ஒரு பொதுப் போராட்டமாக அமையும். மாறாக, தமிழ்மக்களின் போராட்டமாக மட்டும் அது அமையாது. அவ்வாறின்றி குதிரைக்கு முன்பு வண்டிலைக் கட்டுவது 1936 இலும், 1980, 1990, 2000 களிலும் தமிழ் அரசியல் மேற்கொண்ட ஒரே தவறினை மீண்டும் செய்வதாக அமையும்.


அதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இதுபற்றி அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும், இந்தியாவிலும் பேச்சுகளை நடத்துவதற்கு முன்பு தெற்குடன் பேச வேண்டும். தெற்கு என்று நான் கூறுவது



தமிழர்கள் குறித்து அக்கறை கொண்டுள்ள தென்னிலங்கை சக்திகளையாகும். அவ்வாறின்றி மேலுமொரு போராட்டப் பாதையினை தெரிவுசெய்வது இலங்கையினதும், தமிழர்களினதும் எதிர்காலத்தின் மீது விழும் அடியாகவே அமையும்.

- ஷிரால் லக்திலக்க

# பிரபாகரன் அரசியலில் கத்துக்குட்டி சொல்ஹெய்ம் இளக்காரம்



விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஓர் இராணுவ மேதையாக விளங்கிய போதிலும் சர்வதேச அரசியல் விவகாரத்தில் அவர் முற்றிலும் கத்துக்குட்டி (அமெச்சூர்) என நோர்வேயின் சுற்றாடல் மற்றும் சர்வதேச விவகார அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

நோர்வேயில் இந்தியாவின் ஐ.ஏ.என்.எஸ். செய்திச் சேவைக்கு அளித்த செவ்வியிலேயே சொல்ஹெய்ம் இவ்வாறு கூறியுள்ளார். வேலுப்பிள்ளை பிரபாகரனை 2001 ஆம் ஆண்டு முதல் 10 தடவைகள் எரிக் சொல்ஹெய்ம் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை, இப்பிராந்தியத்தில் இந்தியாவின் முக்கியத்துவத்தை 2006 ஆம் ஆண்டு மறைந்த. விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் புரிந்துகொண்டிருந்த தாகவும் இந்தியாவுக்கு முரணாக செய்யும் எதுவும் பலனளிக்காது எனவும் அவர் கூறியதாக சொல்ஹெய்ம் குறிப்பிட்டுள்ளார். ராஜீவ் கொலையில் தமக்குப் பங்கில்லை என எல்.ரி.ரி.ஈ. தலைவர் பிரபாகரனும் அவ்வமைப்பின் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மானும் பல மாதங்கள் கூறிவந்ததாக அன்ரன் பாலசிங்கம் தன்னிடம் புகாரிட்டார் எனவும் எரிக் சொல்ஹெய்ம் கூறியுள்ளார். "இதில் தமக்குப் பங்கில்லை என அவர்கள் பாலசிங்கத்தை நம்பவைக்க முயற்சித்தனர்" என சொல்ஹெய்ம் குறிப்பிட்டுள்ளார். "இக்கதையை நான் நம்பவில்லை. இறுதியில் அவர்கள் என்னிடம் பொய்கூறுவதை விட்டுவிட்டார்கள்" என அன்ரன் பாலசிங்கம் கூறியதாக எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

# பாரதிராஜா பட அனுபவம் பார்த்திபன் வேதனை





என்னை வைத்து "வித்தகன்" படத்தை தயாரிக்கும் மாணிக்கம் நாராயணன் ஒருநாள் என்னிடம், ஒரு பெரிய டைரக்டரின் படத்தில் நீங்கள் நடிக்க வேண்டும். எவ்வளவு சம்பளம் எதிர்பார்க்கிறீர்கள்? என்று கேட்டார். நான் ஒரு தொகையைச் சொன்னேன்.

அவர் அவ்வளவு சம்பளம் கொடுக்க மாட்டார் என்று சொன்ன மாணிக்கம் நாராயணனிடம், யார் அந்த டைரக்டர்? என்று கேட்டேன். பாரதிராஜா என்றார்.

அவர் படம் என்றால், சம்பளம் இல்லாமலே கூட நடிக்கத் தயார். அவர் பக்கத்தில் இருந்தாலே போதும் என்றேன். நான் ஆரம்ப காலத்தில் வாங்கிய சம்பளத்துக்கு நடிக்க சம்மதித்தேன்.

பாரதிராஜா இரண்டு மூன்று முறை என்னை அழைத்து, நான் நடிக்க வேண்டிய கட்டுவிரியன் என்ற கதாபாத்திரம் பற்றி விளக்கினார். ஒரு தொகையை அட்வான்ஸ் ஆக கொடுத்தார். பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்தார்.

போட்டோ எடுக்க வேண்டும் என்றார்கள். நான் போட்டோ எடுத்துக்கொடுத்து அனுப்பினேன். போட்டோவைப் பார்த்துவிட்டு, அந்த கதாபாத்திரத்துக்கு பார்ததிபன் பொருத்தமாக இருக்கிறார் என்று பாரதிராஜா கூறியிருக்கிறார்.

மேலும் ஒரு போட்டோ சூட்டுக்காக கடந்த 9 ஆம் திகதி நான் தேனி போய் இருக்க வேண்டும். பாரதிராஜா அலுவலகத்தில் இருந்து தகவல் எதுவும் வரவில்லை. 10 ஆம் திகதி, இயக்குனர் அமீரை வைத்து போட்டோ சூட் எடுப்பதாக தகவல் அறிந்தேன். ஆனால், இந்த நிமிடம் வரை எனக்கு பாரதிராஜாவிடம் இருந்து தகவல் சொல்லப்படவில்லை.

பாரதிராஜா படத்தில் நடித்தால் புது அனுபவம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன். இப்படி ஒரு அனுபவம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை.

# 20 வயதுக் கணிதமேதை எவரிஸ்ற் கலுவா



கணித மேதைகளோ, விஞ்ஞானிகளோ பொதுவாக, தமது ஆராய்ச்சிகளுக்குள்ளே மூழ்கியிருப்பார்கள் சுற்றி நடக்கும் விஷயங்களில் அவ்வளவாக ஈடுபடமாட்டார்கள் என்பது பொதுக் கருத்து. சில விதிவிலக்குகள் உண்டு. அல்பேர்ட் ஐன்ஸ்டீன் ஒரு கட்டத்துக்குப் பிறகு அரசியலில் மிகத் தீவிரமாக மூழ்கிவிட்டார். அதன் விளைவாக உண்மையில் அவருடைய ஆராய்ச்சி பெரிதும் தடைப்பட்டது.

ஆனால், பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள் இப்படி பொது விவகாரங்களில் தலையிடுவதில்லை. அவர்களுக்கும் வலுவான கருத்துகள் இருக்கத்தான் செய்யும். ஆனால் அதை வெளியே சொல்ல அவர்கள் முற்படுவதில்லை.

எவரிஸ்த் கலுவாவின் வாழ்க்கை அப்படியாக இல்லை. 20 வயது என்பது சாவதற் கான வயதா என்ன? அதுவும் நோய் நொடி வந்து சாகவில்லை இந்த பிரெஞ்ச் இளைஞர். ஏழ்மையில் சிக்கி, உணவுக்கு வழியில்லாமல் சாகவும் இல்லை. துப்பாக்கியால் சுடப்பட்டுக் கொல்லப்பட்டார்.

ஒவ்வொரு கணித மேதைக்கும் சிறு வயதில் அந்தத் துறையில் செல்வதற்கான உத்வேகத்தைக் கொடுப்பது ஒரு புத்தகமே. கேத்திரகணிதம் பற்றி லெஜாந்த்ர எழுதிய ஒரு புத்தகம் 14 வயதுச் சிறுவன் கலுவா கையில் கிடைத்தது. கணிதப் புத்தகங்களை எளிதாகப் படித்துமுடித்தபின் அடுத்து சுடச்சுட கணிதத் துறையில் வெளியாகும் ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படிக்க ஆரம்பித்தான் கலுவா. கலுவாவை இரண்டு விஷயங்கள் ஈர்க்க ஆரம்பித்தன. ஒன்று தந்தையின் அரசியல். மற்றொன்று கணிதம்.

புரட்சிகர எண்ணம் கொண்ட இளைஞர்கள் உருவாக்கிய பீரங்கிப் படையில் சேர்ந்தார். புரட்சிப் படைகளும் மக்களும் நிகழ்த்திய ஜுலைப் புரட்சியில் பத்தாம் சார்ள்ஸ் தோற்கடிக்கப்பட்டு துரத்தப்பட டார். கலுவாவின் படையில் இருந்த பல அதிகாரிகள், மன்னராட்சியைக் குலைக்கச் சதி செய்தனர் என்று சொல்லி கைது செய்யப்பட்டனர். கலுவாவும் சிறையில் அடைக்கப்பட்டான். சில மாதங்களின் பின் விடுவிக்கப்பட்டான்.

ஆச்சரியம் என்னவென்றால் இவ்வாறு இவன் புரட்சி செய்துகொண்டிருக்கும்போது கணிதம் செய்ய எப்படி நேரம் கிடைத்தது என்பதுதான்.

புரட்சி நடந்தபோதும், பின்னர் சிறையில் இருந்தபோதும் அவர் கணித ஆராய்ச்சியில் தன் நேரதைச் செலவிட்டார். கல்லூரியில் சேர்வதற்கு முன்னதாகவே அவர் இரண்டு கணித ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி அறிவியல் அகடெமிக்கு அனுப்பினார். நான்கு படிகளைத் தாண்டிய எந்த பலபடிச் சமன்பாட்டுக்கும், அதன் கெழுக்களைக் கொண்டு விடைகளை எழுதிவிட முடியாது என்ற மிக முக்கியமான கருத்தை அவரது ஆராய்ச்சிகள் சுட்டிக்காட்டின.

20 வயதே முடிந்திருந்த கலுவா பட்டம் ஏதும் பெறவில்லை. எந்த வேலையும் அவருக்குக் கிடைக்கவில்லை. ஆனால் ஏதோ காதல் விவகாரத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறார் போலத் தெரிகிறது. அத்துடன் அவரது அரசியல் சார்பும் அவருக்குச் சாதகமாக இல்லை. அந்தக் காலத்தில் "ஜெண்டில்மேன்" என்போர் தமது கௌரவத்துக்கு இழுக்கு வந்துவிட்டால் "ஒண்டிக்கு ஒண்டி" என்ற ட்யூயல் சண் டைக்கு எதிராளியை அழைப்பார்கள். ஆளுக்கு ஒரு துப்பாக்கி (அதற்கு முந்தைய காலத்தில் வாள்) எடுத்துக்கொண்டு ஒரு குறிப்பிட்ட தூரம் சென்று ஒருவரை ஒருவர் குறிபார்த்துச் சுடவேண்டும். செத்தவர் செத்தார், பிழைத்தவர் பிழைத்தார்!

இந்தக் காதல் விவகாரம் காரணமாக, அந்தப் பெண்ணின் அப்போதைய காதலனை எவரிஸ்த் கலுவா ட்யூயலுக்கு அழைத்தார். குறிப்பிட்ட நாளுக்கு முந்தைய நாள், கலுவாவுக்குத் தான் பிழைக்கப் போவதில்லை என்று தெரிந்திருக்கவேண்டும். அவசர அவசரமாக, தனது கணிதக் கண்டுபிடிப்புகளையெல்லாம் தாள்களில் எழுதத் தொடங்கினார். அந்தக் குறிப்புகளின் இடையே மார்ஜினில், "நேரம் போதவில்லையே, நேரம் போதவில்லையே" என்று அவர் எழுதியதும் இருக்கிறது. எழுதி முடித்து, அவற்றைத் தன் நண்பருக்கு அனுப்பிவிட்டு, காலையில் ட்யூயலுக்குப் போனார். எதிராளி சுட்ட குண்டு கலுவாவின் வயிற்றில் பாய்ந்தது. அடுத்த நாள் அவர் உயிரை விட்டார். அப்போது அவருக்கு 20 வயதே நிரம்பியிருந்தது. கணித உலகம் ஒரு மாபெரும் மேதையை இழந்திருந்தது.

- பத்ரி சேஷாத்ரி

# கண்களின் நிறத்தை மாற்றலாம்!



மனிதர்களில் பெரும்பாலானவர்களுக்கு கறுப்பு அல்லது பழுப்பு நிறக்கண் கள் இருக்கும். ஆனால் யாருக்காவது நீலநிறக் கண்களோ அல்லது வெளிர்பச்சை நிறக் கண்களோ இருந்தால், அது மிகவும் பிரபலமாகிவிடும். சிலர் கலர் லென்ஸ்களைப் பயன்படுத்தி அழகு சேர்க்கின்றனர்.

நீலநிறக் கண்கள் என்று ஒன்று இயற்கையில் இல்லவே இல்லை. எல்லோரின் கண்களிலும் பழுப்பு மற்றும் நீல நிறங்கள் இருக்கும். பெரும்பாலானவர்களுக்குப் பழுப்பு நிறம் அதிக விகிதத்திலும் நீல நிறம் குறைவான விகிதத்திலும் காணப்படும். இந்த விகிதம் மாறி அமைந்தவர்களுக்கு நீலநிறக் கண்கள் காணப்படும். கலிபோர்னியாவில் உள்ள பிரபல டாக்டர் கிரெக், லேசர் சிகிச்சையால் கண்களின் நிறத்தை வெறும் 20 வினாடிகளில் மாற்ற முடியும் என்கிறார். லேசர் சிகிச்சையால் நலநிறக் கண்களைப் பெற முடியும். இந்த அறுவைச் சிகிச்சைக்கு சுமார் 6 இலட்சம் ரூபா செலவாகும். இன்னும் இரண்டு ஆண்டு களுக்குள் இந்தச் சிகிச்சையை உலகம் முழுவதும் பெறலாம். "பழுப்பு நிறக்கண்களை நீலமாக மாற்றுவது சுலபம். ஆனால் மீண்டும் அவற்றை அசல் நிறத்துக்கே மாற்றுவது என்பது முடியாது. ஏனென்றால் பழுப்பு நிறத்துக்கான செல்கள் மீண்டும் உற்பத்தியாகாது" என்கிறார் டாக்டர் கிரெக்.





# இருக்கின்ற சட்டங்கள் எல்லாம் பயன்படுத்தி தி.மு.க.விற்கு வழக்கு



(சென்னை)

தி.மு.க.வினர் மீது இருக்கும் சட்டத்தை எல்லாம் தோண்டித் துருவி எடுத்து வழக்கு போட்டு வருகிறார்கள் என்று கருணாதி கூறினார்.

தி.மு.க.வைச் சேர்ந்தவரும், மூத்த சட்டத்தரணியும் முன்னாள்எம்பியுமான சண்முக சுந்தரத்தின் மகன் மனு ராஜ"க்கு சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் திருமணம் நடநதது. கருணாநிதி தலைமை தாங்கி நடத்தி வைத்தார். அங்கு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.




இன்று தி.மு.க.வினர் மீது 3 வழக்குகள், 4 வழக்குகள் என்று போடுகிறார்கள். இருக்கும் சட்டத்தை எல்லாம் தோண்டித் துருவி எடுத்து வழக்கு போட்டு வருகிறார்கள். குண்டர் சட்டத்திலும் வழக்கு போடுகிறார்கள்.

இந்த காலத்தில் சண்முக சுந்தரம் போன்றவர்களின் ஆற்றல் எவ்வளவு தேவை என்பதை புரிந்து இங்கு இதை சுட்டிக்காட்டுகிறேன். இவர்களுக்கெலலாம் இந்த இயக்கம் என்றும் பாதுகாப்பாக இருக்கும் என்பதற்காகத்தான் அரசு வழக்கறிஞர் பதவியும், தியாகத்தை மதித்து பாராளுமன்ற மேலவை உறுப்பினர் பதவியும் வழங்கினோம்.

அன்று முதல் இன்று வரை இயக்கத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு இயக்கத்திற்கு ஏற்படும் துன்பத்தில் எல்லாம் பங்கெடுத்து, இயக்கத்தின் மீது அக்கறை கொண்டது தான் சண்முக சுந்தரம் குடும்பமாகும். சட்டத்தை வைத்து நம்மை மடக்கி விடலாம் என்று நினைப்பவர்களை அடக்கி விடும் ஆற்றல் கொணடவர். அவரது ஆற்றலை அறிவை இந்த இயக்கம் பயன்படுத்திக் கொள்கிறது.

மணமகன் மனு ராஜ் என் அன்பு மகள் கனிமொழியிடம் உதவியாளராக பணியாற்றி துணை நின்று வருகிறார். இன்றும் திகார் சிறையில் இருந்து செய்திகளை அனுப்புபவராக இருக்கிறார். அந்தக் குடும்பத்திற்கும் இயக்கத்திற்கும் உள்ள தொடர்புகளை சுட்டிக் காட்டவே இவற்றையெல்லாம் நினைவுப் படுத்தினேன் என்றார் கருணாநிதி.

நிகழ்ச்சியில் மு.க.அழகிரி, மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கடந்த சில வாரங்களாக மதுரை அருகே உள்ள தனது பண்ணை வீட்டில் ஓய்வெடுத்து வந்த அழகிரி தனது ஓய்வை முடித்துக் கொண்ட பின்னர் கலந்து கொண்ட முதல் கட்சி நிகழ்ச்சி இது என்பது குறிப்பிடத்தக்கது.

# வேல்முருகனால் பா.ம. கட்சிக்கு அச்சுறுத்தல் இல்லையாம்

(புதுடில்லி)

வேல்முருகனை நீக்கியதால், பா.ம.க., பிளவுபடும் என செய்திகள் வெளியான நிலையில், கட்சி நிறுவுனர் ராமதாஸ் நேற்று முன்தினம் கடலூரில் நடந்த பொதுக்குழு கூட்டத்தில் பேசும் போது, வேல்முருகன் பற்றி குறிப்பிடுகையில், "கொசுக்கடித்ததால், தட்டிவிட்டேன் விழுந்திருச்சு" என்று சூசகமாகத் தெரிவித்தார். பா.ம.க.,விலிருந்து வேல்முருகன் நீக்கப்பட்ட பின், அவரது ஆதரவாளர்கள் கடலூரில் போட்டிக் கூட்டம் நடத்தினர்.

இதனால், கடலூரில் பரபரப்பான சூழ்நிலை நிலவியது. வேல்முருகன் ஆதரவு அதிகமுள்ளதாக கூறப்படும் கடலூரிலேயே பா.ம.க., மாவட்ட பொதுக் குழுவை கூட்டியிருந்தார்.

அதில் ராமதாஸ் பேசியதாவது சில தினங்களுக்கு முன் ஒரு பத்திரிகை நிருபர் என்னை போனில் தொடர்பு கொண்டு, என்ன இப்படி நடந்து விட்டது எனக் கேட்டார். அதற்கு நான், அது பிஞ்சியிலேயே பழுத்து விட்டது.

எதற்கும் பயன்படாது என்பதால் தூக்கிப் போட்டு விட்டோம். கொசு கடித்ததால் தட்டினேன் அது விழுந்து விட்டது என்றேன். வேறு ஏதேனும் சொல்ல விரும்புகிறீர்களா என அவர் கேட்டதற்கு, இதற்கு மேல் சொல்வதற்கு ஒன்றும் இல்லை, என்றேன். அதையேதான் இங்கும் சொல்கிறேன் எனத் தெரிவித்தார்.

# 2 ஆவது பசுமைப் புரட்சிக்கு தயாராகின்றது தமிழ்நாடு

(சென்னை)




மாநில அரசின் விவசாய திட்டங்களை சிறப்பாகச் செயற்படுத்த விவசாயிகளுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர்களை முதல்வர் ஜெயலலிதா அறிவுறுத்தினார்.

ஜெயலலிதா தலைமையில் மாவட்ட ஆட்சியர்கள்- பொலிஸ் உயர் அதிகாரிகளின் 2 நாள் மாநாடு சென்னையில் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றது. மாநாட்டைத் தொடக்கி வைத்து உரையாற்றும் போதே மேற்கண்ட வாறு தெரிவித்தார். தொடர்ந்து மேலும் அரசு விவசாய துறைக்கு பல கோடி செலவு செய்து வருகிறது. இருந்தும் விவசாயிகளின் வருவாயில் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் விவசாயத்தின் பங்கு மிகக் குறைவாகவே உள்ளது.

மேற்கொள்ளும் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் இரண்டாவது பசுமைப் புரட்சி ஏற்படும் என்று உறுதியாக நம்புகிறேன். இதில் மாவட்ட ஆட்சியர்களின் பங்கு மிக முக்கியமானது. வரும் 5 ஆண்டுகளில் விவசாயிகளின் வருமானத்தை 3 மடங்கு அதிக ரிக்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இதற்கு மாவட்ட ஆட்சியர்கள், விவசாயிகளுடன் நெருங்கிப் பழகவேண்டும். வேளாண் திட்டங்களை மாவட்டங்களில் சீரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். அரசின் இலவச மாடு, ஆடுகள் வழங்கும் திட்டத்தின் மூலம் கிராமப்புற மக்களின் நிலைத்த வருவாய்க்கு வழி ஏற்பட்டுள்ளது. மீன்வளத் துறையை பொறுத்தவரையில் கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த ஆட்சியர்கள், மீன்வளத் துறை தொடர்பான திட்டங்களை சிறப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும். ஆழ்கடல் மீன்பிடிப்பு, மீன்பிடித் துறைமுகங்கள், மீன் பதப்படுத்தும் பூங்காக்கள் போன்ற கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

# நிதிநெருக்கடியில் திணறும் விஜய் மல்லையா



பிரபல தொழில் அதிபர் விஜய்மல்லையா 'கிங்பிஷர்' என்னும் விமான நிறுவனத்தை நடத்தி வருகிறார். உலகம் முழுவதும் 54 நகரங்களை இணைக்கும் வகையில் இவரது 300க்கும் மேற்பட்ட விமான சேவைகள் உள்ளன. விமான எரிபொருள் உயர்வு மற்றும் கடன் பிரச்சினை காரணமாக கிங்பிஷர் நிறுவனம் கடும் நிதி நெருக்கடியில் சிக்கியது.

இந்த நிலையில் பைலட்களும் சம்பளம் கோரி வேலைக்கு வரமறுத்ததால் கிங்பிஷர் நிறுவனம் கடும் திணறலுக்கு உள்ளானது.

கடந்த 4 நாட்களில் 120 விமான சேவைகளை அந்த நிறுவனம் ரத்துத் செய்தது. நேற்று 40 விமானங்கள் ரத்துத் செய்யப் பட்டன. நேற்றுமுன்தினமும் இந்தியா முழுவதும் கிங்பிஷர் விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. பயணிகள் அவதிக்குள்ளாவதால் இது பற்றி விளக்கம் அளிக்குமாறு கிங்பிஷர் நிறுவனத்துக்கு மத்திய விமானத்துறை உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து விஜய் மல்லையா கூறுகையில், வெளிநாடுகளில் தனியார் விமான நிறுவனத்துக்கு உதவி செய்கிறார்கள். ஆனால் நமது நாட்டில் விமான நிறுவனங்களுக்கு அதிக வரி விதிக்கிறார்கள். அதையும் தாங்கிக் கொண்டு வருவாய் இழப்பு ஏற்படும் வழித்தடங்களில் நாங்கள் சேவை செய்து கொண்டிருக்கிறோம் எனத் தெரிவித்தார்.

# மன்னிப்புக் கேட்டது அமெரிக்கா

(டில்லி)

முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமை பாதுகாப்பு சோதனைகளுக்கு உட்படுத்தியது குறித்து அமெரிக்கா நேற்றுமுன்தினம் மன்னிப்பு கோரியுள்ளது.

நியூயோர்க் கெனடி விமான நிலையத்தில்கடந்த செப்டெம்பர் 29 ஆம் திகதி கலாம் பாதுகாப்பு சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் நடைபெற்று ஒன்றரை மாதங்கள் கடந்த நிலையிலேயே இந்த விடயம் வெளியாகியிருந்தது. இந்தியாவில் இது கொந்தளிப்பு நிலையை ஏற்படுத்தியது. அதன் பின்னரே வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா, அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் நிருபமா ராவ் ஊடாக இந்திய அரசின் எதிர்பபை அமெரிக்க அதிகார உயர்மட்டத்துக்கு தெரிவித்திருந்தார்.

அமெரிக்கப் பாதுகாப்பு விதிமுறைகளின்படி, இந்திய முன்னாள் ஜனாதிபதிக்கு பாதுகாப்புச் சோதனைகளில் எந்த விதி விலக்கும் கிடையாது.

இருந்தபோதிலும் அவரை மரியாதையாக நடத்தியிருந்தனர் நியூயோர்க் விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் என்று இந்திய வெளியுறவு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில், அமெரிக்கச் சம்பவத்துக்கு நியாயம் கற்பிக்கப்பட்டிருந்தது. அப்படியிருந்தும், புதுடில்லியில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் இராஜதந்திர விடயங்களுக்கு பொறுப்பான அந்தஸ்திலுள்ள தூதர் பீட்டர் பேர்லேக், அமெரிக்க அரசின் மன்னிப்புக் கடிதத்தை நேற்று முன்தினம் அப்துல் கலாமிடம் நேரில் கையளித்து, மன்னிப்பு கோரியுள்ளார்.

# பெண்களைக் கடத்தி விபசாரம் காங்கிரஸ் தலைவர் குற்றச்சாட்டு

(புதுடில்லி)



சத்தீஸ்கர் மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சரியில்லாததால் பெண் கள் கடத்தப்படும் சம்பவம் அதிகரித்துள்ளது. கடந்த 8 ஆண்டுகளில் மட்டும் 20,000 பழங்குடியினப் பெண்கள் கடத்தப்பட்டு டில்லி, மும்பை, பெங்களூர் மற்றும் சென்னை ஆகிய பெரு நகரங்களில் விற்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் தலைவர் அஜித ஜோகி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது, பெண்கள் கடத்தப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சரியில்லை.

அதனால் தான் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிக ளில் ஆள் கடத்தல் அதிகரித்துள்ளது என்றார். சத்தீஸ்கரின் வடக்கு பகுதியில் வாழும் ஏழைப் பெண்களை வேலை வாங்கித் தருவதாகக் கூறி அழைத்துச் சென்று பெரிய நகரங்களில் விபசாரத்தில் தள்ளிவிடுகின்றனர்.

# சர்வதேச விமானக் கண்காட்சி

உலகச் செய்திகள்





சர்வேதேச விமானக் கண்காட்சி ஐக்கிய அரசு எமிரேட்ஸ் நாடான துபாயில் தொடங்கியது. முதல நாளில் 50 விமானங்களை முற்பதிவு செய்தது துபாய் அரசு.

ஆண்டு தோறும் விமானக் கண்காட்சிகள் ஆசிய, ஐரோப்பா போன்ற நாடுகளில் தான் நடை பெறுவது வழக்கம். இம்முறை வளைகுடா நாட்டில் நடந்துள்ளது. ஐக்கிய அரபு எமி ரேட் நாடான துபாயில் நேற்றுமுன் தினம் கோலாகலமாக தொடங்கியது.

இங்கு பல்வேறு நாடுகளின் விமானத் தயாரிப்பு மற்றும் உதிரிப் பாகங்களின் காண்காட்சி நடந்தது. ஐந்து நாட்கள் நடக்கும் இந்தக் கண்காட்சியில், 120-க்கும் மேற்பட்ட நாடுகளின் விமானங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. முன்னதாக விமான சாகச நிகழ்ச்சிகள் நடந்தன.

பின்னர் அமெரிக்காவின் 777 ரக போயிங்க் விமானங்களை வாங்க துபாய் அரசு முடிவு செய்து, அதற்கான முற்பதிவைச் செய்தது. இதன் மொத்த மதிப்பு 18 பில்லியன் அமெரிக்க டொலராகும். மொத்தம் 30 முதல் 50 விமானங்களை வாங்க முறபதிவு செய்துள்ளது. இதற்கான ஒப்பநதம், அராப் எமிரேட்ஸ் தலைவர் ஷேக் அகமது பின்மக்தும், போயிங் விமானத் தயாரிப்பு நிறுவனத்தின பிரதிநிதிகளிடையே நேற்றுமுன்தினம் கையெழுத்தானது.

# யேமன் மோதலில் 11பேர் பலி



யேமனிய தாயிஸ் நகரில் அரசாங்கப் படையினருக்கும் எதிர்க்கட்சிப் போராட்டக்காரர்களுக்குமிடையே இடம்பெற்ற மோதலில் குறைந்தது 11 பேர் பலியாகியுள்ளனர். இந்தச் சம்பவத்தில் பொதுமக்கள் உட்பட பெருந் தொகையானோர் காயமடைந்துள்ளனர்.

யேமனுக்கு ஐக்கிய நாடுகள் பிரதி நிதி ஜமால் பெனோமர் விஜயம் செய்துள்ளதையொட்டியே இந்த மோதல்கள் இடம்பெற்றுள்ளன. அந்நாட்டு ஜனாதிபதி அலி அப்துல்லாஹ் சாலெஹ்ஹின் 33 வருட ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த ஜனவரி மாதம் முதற்கொண்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## லோவா மாகாண முதல்வராக 18 வயது மாணவன் தெரிவு

அமெரிக்காவில் 18 வயது பாடசாலை மாணவன் ஒருவன் மாநகர மேயராக தேர்வு செய்யப்பட்டான். அமெரிக்காவின் லோவா மாகாணத்திற்கான உள்ளாட்சித்தேர்தல் கடந்த 11ஆம் திகதி நடந்தது.

இதில் அர்டாலி என்ற மாநகராட்சி மேயர் பதவிக்கு அங்குள்ள ஹாம்டன் டுமவுன்ட் என்ற பள்ளியில் படித்து வந்த ஜெர்மிமின்னிர் (வயது - 18) மாணவன் மேயர் வேட்பாளராக போட்டியிட்டான். இதில் 24 வாக்குகள் பெற்று மேயராக தேர்வு செய்யப்பட்டார்.

இம்மாணவனை எதிர்த்து போட்டியிட்டவரும் தற்போது மேயராக இருந்தவருமான வெர்ஜில் ஹோமர் வெறும் 8 வாக்குகள் மட்டுமே பெற்றார்.

இது குறித்து மேயராக தேர்வு செய்யப்பட்ட மாணவன் ஜெர்மிமின்னீர் கூறுகையில், எனது தந்தை நான் பிறப்பதற்கு முன்பு இம்மாநகராட்சியின் முன்னாள் மேயராக இருந்தவர். தற்போது நான் மேயராக தேர்வு செய்யப்பட்டுள்ளேன் என்றார். அடுத்த ஆண்டு ஜனவரி 3ஆம் திகதி மேயராக பதவி ஏற்கவுள்ளார். நான்கு ஆண்டுகள் இப்பதவியில் இருப்பார் ஜெர்மி மின்னீர்.

## நாளொன்றிற்கு 10,000 விவாகரத்துக்கள்

சீனாவில் நாள்தோறும் 10,000 தம்பதிகள் விவாகரத்துப் பெற்று வருகின்றனர். கம்யூனிச நாடுகளில் ஒன்றான சீனாவில் பொருளாதாரம் சிறந்த வளர்ச்சியைக் கண்டு வருகிறது.

ஆனால் சீனர்களின் வாழ்க்கை முறை, குடும்பப் பண்புகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. நடப்பு ஆண்டின் முதல் 9 மாத காலத்தில் 28இலட்சம் தம்பதியர் விவாகரத்துக் கோரி விண்ணப்பித்துள்ளதாக சீன பொது விவகாரங்கள் அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த ஆண்டை இது 12 சதவீதம் அதிகரித்துள்ளது, தலைநகர் பெய்ஜிங், ஷாங்காய் போன்ற பெருநகரங்களில் இது 30 சதவீதமாக உள்ளது.

# வெள்ளத்தால் தாய்லாந்தில் பெரும் பாதிப்பு



(பாங்கொக்)

தாய்லாந்தில் ஏற்பட்ட வெள்ளத்தில், பழங்கால தலைநகரம் பாதிக்கப்பட்டது. தாய்லாந்தில் பெய்து வரும் பலத்த மழையால் அங்குள்ள ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் தலைநகர் பாங்கொக் உள்ளிட்ட பல நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. இந்த நிலையில் தாய்லாந்தின் பழங்கால தலை நகராகத் திகழ்ந்த ஆயுத்தயா நகரம் வெள்ளத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

இங்கு 200-க்கும் மேற்பட்ட வரலாற்று சிறப்புமிக்க நினைவிடங்கள், புத்த கோவில்கள் உள்ளன. இவை அனைத்தும் தண்ணீரில் மூழ்கிக் கிடக்கின்றன. இந்த நினைவுச் சின்னங்கள், பழங்காலத்தில் 1000 டன் செங்கற்களால் கட்டப்பட்டவை. அவை வெள்ளத்தில் மூழ்கிக் கிடப்பதால் மிகவும் பாதிப்பு ஏற்படும் என்று ஆயுத்தயா வரலாற்றுப் பூங்காவின் இயக்குனர் சயானந்த் புசாய ராத் தெரிவித்துள்ளார்.

ஆயுத்தயா நகரம் கடந்த 417 ஆண்டுகளுக்கு முன்பு தாய்லாந்தின் தலைநகரமாகத் திகழ்ந்தது. இங்கு 33 அரசர்கள் ஆட்சி செய்துள்ளனர். இது பாங்காக்கில் இருந்து 80 கி.மீட்டர் தூரத்தில் உள்ளது. இங்கு 10 இலட்சம் பேர் வசிக்கின்றனர்.

இதேவேளை சோனி, நிக்கோன், கனென், வேஸ்டேன் டிஜிற்றல் மற்றும் முன்னணி கார் தயாரிப்பு நிறுவனங்கள் என தொழிற்சாலைகளை அமைத்துச் செயற்படும் நிறுவனங்களின் பட்டியல் நீளமானது. இவை அனைத்துமே வெள்ளப்பெருக்கு காரணமாக மூடப்பட்டுள்ளன.

இப்பகுதியிலுள்ள ஜப்பானிய நிறுவனங்கள் ஹொன்டா, சோனி, நிக்கோன் ஆகிய மூன்றின் தொழிற்சாலைகளுமே, வெள்ளம் வடிந்தாலும் மீண்டும் இயங்க முடியாத அளவுக்கு சேதமடைந்து விட்டன. இயந்திரங்கள், உதிரிப்பாகங்கள் வரை அனைதுமே சேதமுற்ற நிலையில் உள்ளன.

மேலே குறிப்பிட்ட வேஸ்டேன் டிஜிற்றல் என்ற நிறுவனம் உலகிலேயே மிகப்பெரிய கணினி ஹார்ட் டிஸ்க் தயாரிப்பாளர்கள். டெல், எச். பி. கணினிகளில் பொருத்தப்பட்டுள்ள ஹார்ட் டிஸ்க்குகளில் பெரிய சதவீதமானவை இவர்களது தயாரிப்புத்தான். இவர்களது தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதால், டெல். எச்.பி கணினிகளின் உலக அளவிலான விற்பனையில் பல தடங்கல்கள் ஏற்படவுள்ளன.

# பதிவிறக்கப் பெட்டகம்

அரசதிகாரத்தின் ஆதாரமாக உள்ள மக்கள் கருத்தைச் சிதைப்பதே, ஒரு புரட்சிகர இயக்கத்தின் முதன்மையான பணியாக இருக்க முடியும். அரசியலை முதன்மையில் வைப்பது என்பது இதுவே. முரண்பாடுகளினூடாக சமூக மாற்றத்தைச் சாத்தியப்படுத்துவதும் இதுதான். ஆனால், வன்முறை முதலில் அழித்தொழிப்பது அரசியலைத்தான். வன்முறை அரசியலுக்கான, தத்துவத்திற்கான, வாசிப்பிற்கான, உரையாடலுக்கான சாத்தியங்கள் அனைத்தையும் அழித்துவிடுகிறது.

– அ.மார்க்ஸ்

அதிகாரத்தை இல்லாதாக்குவது என்பது சாத்தியமில்லை. அதிகாரம் என்பது ஒரு புதிர். அதை ஒடுக்குமுறையாக மாத்திரம் நினைக்கக் கூடாது; ஆக்கபூர்வ உயிர்ப்புச் சக்தியாகவும் நோக்க வேண்டும். அதிகாரத்தை முற்றாக அழிக்க நினைத்தால் அது உயிரின் அழிவில் கொண்டு விடும்.

– மிஷெல் ஃபூக்கோ

மனித உரிமைகளுக்கான போராட்டங்கள் மனித உரிமைகளுக்கெதிரானவையாக மாறிவிடுகின்றன. கொள்கையும் லட்சியமும் அனைத்தையும் நியாயப்படுத்தி விடுகின்றன.

– டெரிடா

எல்லா விதமான தேசிய, மத, சித்தாந்தப் பொய்களையும், உலகின் மக்கள் தங்கள் உணர்வுகளிலிருந்து நீக்க வேண்டும். இது எனது சொந்தக் கருத்து அல்ல. பல்வேறு பார்வைகளை ஆய்வு செய்து, சரித்திரத்துடன் பொருத்திப் பார்ப்பதன் விளைவு என்பதைக் குறிப்பிட வேண்டும். முதலாவதாக, சரித்திரத்தில் எங்குமே பிரிவினைச் சக்திகள் சுபிட்சத்தைச் சாதித்ததில்லை. சுபிட்சம் இயற்கையாகச் சம்பவித்த தருணங்களில் கூட, அதை நிர்மூலமாக்கிய பிரிவினைகள் நிலவியுள்ளன. மதரீதியான கட்டுக்கோப்புக்களைப் பூர்வீக சமூகங்கள் மேற்கொண்ட போது, அந்தச் சமூகங்களின் பிரிவினையற்ற கூட்டியக்கம்தான் சுபிட்சத்தைச் சாதித்துள்ளது. விஞ்ஞான பூர்வமான முறைகளாக உணவுற்பத்தி பிறந்த ஆரம்ப காலங்களின் சாதனை அது. மக்களைப் பிணித்து ஒரு கூட்டியக்கத்தைச் சாதிக்க ஒருசமயம் உதவிய அதே நம்பிக்கை, தனது உபரியான நிலையை விட முக்கியத்துவம் பெற்றுவிடும் போது, அது உடனடியாகப் பேராபத்திற்கும் அழிவுக்கும் வழிவகுத்துள்ளது. இது சரித்திரம்.

– தருமு சிவராமு

மனித இருத்தல் எப்பொழுதும் சாவுடன் போராடிக் கொண்டிருக்கிறது, தனது மரணம் பற்றிய பயமே மனிதனை கூட்டிணைவை தேடும் ஒரு சமூக மிருகமாக வைத்திருக்கிறது. இவ் இணைவின் அடிப்படையே, தனது இனத்தை பெருக்குவதின் அவசியத்தையும், அதாவது இன வலிமையை உருவாக்க வேண்டிய தேவையையும் உருவாக்குகிறது. தனது மனதின் கட்டமைப்பில் செறிந்துள்ள [அல்லது கட்டமைப்பை உருவாக்கிய முக்கிய காரணியில் ஒன்றான] மரண பயத்தின் மனோவியல் வன்முறையிலிருந்து தப்ப மனதை பிறருடன் வினைப்படுத்திக் கொள்வதும் அவசியமாகிறது. இனவலிமையை பெருக்கும் ஒரு சடங்காக திருமணமும் [அதனால்தான் இதனை வளமை பெருக்க சடங்கு என்கிறார்கள்], மனோவியல் வன்முறையை பகிர்வதன் மூலம் அதன் அழுத்தத்திலிருந்து தப்பும் ஒரு செயலாக காதலும் உருவான பின்னணியை இவ்வாறாக யூகிக்க முடிகிறது.

– ஜமாலன

முதலாளியத்தின் தீய விளைவு, முதலாளி தொழிலாளியைச் சுரண்டுதல் என்கிற அம்சத்தில் மட்டுமே இங்கு எதிர் கொள்ளப்பட்டது. மாறாக, அதன் முதலீட்டுத்தன்மை [Investment Pattern] என்பதே இயற்கை வளங்களை அபரிமிதமாக உறிஞ்சுவதாக இருந்தது குறித்த கவலையை முதலாளிய எதிர்ப்பாளர்கள் அதற்குரிய முக்கியத்துவத்துடன் கண்டு கொள்ளவில்லை.

– ராஜன்குறை

உடல்குறைபாடுள்ளவர்கள் மீது செலுத்தப்படும் மிகப்பெரிய வன்முறை, அவர்கள் மீது பரிதாபப்படுவதுதான். பரிதாபம் கொள்ளும் போது, பரிதாபம் கொள்பவர் பரிதாபத்துக்கு ஆளாகும் நபரை விட தன்னை மேல்நிலையில் வைத்துக் கொள்கிறார். ஃபாசிஸம் என்ற மிகப்பெரிய வன்முறையின் ஆரம்பப் புள்ளி இந்த இடம்தான்.

– சாரு நிவேதிதா

ஒளிமயமான எதிர்காலம் ஒன்றைச் சுட்டிக்காட்டி மக்களின் நிகழ்காலம் அவர்களிடமிருந்து பறிக்கப்படுகின்றது. இறந்த கால அநீதிகள், எதிர்கால விடுதலை இரண்டிற்குமிடையில் நசுங்கிச் சிதைவது நிகழ்காலம்.

– அ.மார்க்ஸ்

பொருட்கள் யாவும் ஒற்றைக் கருத்தைத் தாங்கி நிற்கின்றன என்பதில் உண்மையில்லை. கருத்துக்கள் துண்டாடப்பட்டவை; முரண்படுபவை; தொடர்ச்சி அற்றவை. எனவே எல்லாவற்றுக்கும் பொருந்துகிற அனைத்துக்குமான கோட்பாடு ஒன்றை நிறுவ முயல்வது சந்தேகத்துக்கிடமானது.

– டெரிடா

# கடாபி - அழிவின் ஆரம்பம்

கடாபியின் அழிவு 200ம் ஆண்டுகளின் நடுப்பகுதியிலிருந்தே ஆரம்பமாகிவிட்டதெனலாம். நாட்டில் உள் கட்டுமானங்களை மேம்படுத்துவது என்ற தலையங்கத்தில் கடாபி உலகமயமாதல் மற்றும் நவ தாராளவாத நிகழ்ச்சி நிரலுக்குள் லிபியாவை உட்படுத்திக் கொள்கிறார். இதன் மறுபக்கமாக ஏனைய அனைத்து நாடுகளிலும் நடந்தது போன்றே லிபியாவை மேற்கு நாடுகளின் புதிய சுரண்டல் அமைப்பு முறைக்கும் உட்படுத்துகின்றது. சுரண்டல் சிறுகச் சிறுக ஆரம்பிக்கிறது. புற்று நோய் போன்று நாட்டை அரித்துச் செல்கின்றது. உலகமயமாதல் செயற்படுத்தப்படும் போதெலாம் இரண்டு பிரதான சமூகக் கூறுகள் உருவாவது வழமை.

முதலாவதாக வறுமையும் வேலையினமையும் அதிகரிக்கும், இரண்டாவதாக மிகச்சிறிய விரல் விட்டெண்ணக் கூடிய நபர்களைக் கொண்ட மேல்த்தட்டு வர்க்கம் அபரிமிதமாக பணத்தையும் மூலதனத்தையும் பெருககிக் கொள்ளும்.

ஆக, லிபியாவில் வறுமை தலைகாடடத் தொடங்கியது. மக்கள் விரக்திக்கும், வெறுப்பிற்கும் உள்ளானார்கள், அவர்களின் மிகச் சிறிய பகுதி இஸ்லாமிய அடிப்படைவாதத்தோடு தம்மை அடையாளப்படுத்திக்கொண்டது. இதில் வேடிக்கை என்ன வென்றால் இஸ்லாமிய அடிப்படை வாதம் என்று வாய் கிழியக் கூக்குரல் போடும் அமரிக்காவும், ஐரோப்பாவும் சவுதி அரேபிய அடிமைகளின் உதவியோடு லிபியாவில் இஸ்லாமிய அடிப்படை வாதத்தைக் கடாபிக்கு எதிராகத் தூண்டின. கடாபிக்கு எதிரான மக்கள் உணர்வு கடந்து போன முப்பது வருடங்களில் இல்லாத அளவிற்கு அதிகரித்தது.

தொழில் துறையில் இரண்டு பிரதான மாற்றங்கள் நிகழ்ந்தன. எண்ணைச் சுத்திகரிப்பு நிறுவனங்கள், வங்கிகள், உப தொழில்கள் போன்றன எல்லாம் தனியார் மயமாகின. பன்னாட்டு நிறுவனங்களின் கொள்ளைக்கு உள்ளாகின. ஏகாதிபத்தியங்கள் அமைதியாக வாழ்ந்த லிபிய மக்களின் வாழ்க்கையில் விளையாட ஆரம்பித்தன. 2004ஆம் ஆண்டின் பின்னர் ரியல் எஸ்டேட், கட்டுமானத்துறை, சுற்றுலாத் துறை போன்றன முழுவதுமாக ஏகாதிபத்திய நிறுவனங்களின் கைகளுக்கு மாறின. இவற்றின் உள்ளூர் பிரதிநிதிகளாக இனக் குழுக்களின் தலைவர்கள், கடாபி இராணுவத்தின் உயர் அதிகாரிகள், கடாபி குடும்பத்தினர் ஆகியோர் உருவாகினர்.

உலகமயமாதல் ஊடுருவிய அனைத்து இடங்களிலும் மற்றொரு நச்சு விதையை ஏகபோகங்கள் விதைப்பது வழமை. அரசு சார்பற்ற நிறுவனங்கள்(NGO) அல்லது தன்னார்வ நிறுவனங்களே அவை.

தன்னார்வ நிறுவனங்களில் பிரதானமாக அமெரிக்கன் எயிட்ஸ், கிரிஸடியன் எயிட்ஸ், உபந்து கபோர் வேர்க்ஸ் போன்ற தன்னார்வ நிறுவனங்களே முதலில் லிபியாவிற்குள் 2004ஆம் ஆண்டளவில் உதவி என்ற பெயரில் உள்நுழைந்தன. சிறிது சிறிதாக தம்மை நிலைப்படுத்திக்கொண்ட இத் தன்னார்வ நிறுவனங்களைத் தொடர்ந்து வெவ்வேறு நோக்கங்களுக்காக அவை லிபியா முழுவதும் விதைக்கப்பட்டன. இவை இரண்டு பிரதான நடவடிக்கைகளை மேற்கொண்டன. உளவறிதல் மிகப் பிரதானமான ஒன்று. இரண்டாவதாக நுகர்வுக் கலாச்சாரத்தில் ஈடுபாடுகொண்ட படித்த மேல் மத்திய தரவர்க்கத்தை அமெரிக்க - ஐரோப்பிய சார்பானதாக மாற்றியது. கருத்தை உருவாக்கும் வலிமைகொண்ட இவர்களுக்கு அதீத பணம் ஊதியமாக வழங்கப்பட்டது.

உலகமயமாதல் உருவாக்கிய மேல்த்தட்டு வர்க்கத்தின் பெரும்பகுதியை கடாபியின் குடும்பத்தினரும் அவரது நண்பர்களும் இராணுவ உயர் அதிகாரிகளும் ஆக்கிரமிக்க ஆரம்பித்தனர். கடாபியின் முதலீடுகள் நாடுகடந்தது. தவிர, இதன் இரண்டாவது தளத்தில் உருவான பணக்கார மத்தியதர வர்க்கமான கலாச்சார உலக மயமாதலிற்கு உட்பட மேற்கை ஆதரிக்கும் நுகர்வு வர்க்கம் ஒன்று உருவானது.

இந்த வர்க்கத்தினரையும் வெறுப்பிற்கு உள்ளான பகுதியினரையும் மேற்கின் உளவு அமைப்புக்கள் பயன்படுத்திக்கொள்ள ஆரம்பித்தன. கடாபியின் மரணப் பொறியை அவரின் கோட்டைக்குள்ளேயே உருவாக்க ஆரம்பித்தன எண்ணை மோகம் கொண்ட ஏகாதிபத்திய அரசுகள்.



இதே வேளை மேற்கின் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுக்குள் உள்வாங்கப்பட்ட கடாபி மேற்கின் அரசுகளோடு உறவை வளர்த்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

ஈராக் மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தின் சூத்திரதாரிகளில் ஒருவர் எனக் கருதப்படும் முன்னைநாள் பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் கடாபியின் கன்னத்தில் முத்தமிட்ட செய்திப் படங்கள் உலகப் பத்திரிகைகளை ஆக்கிரமித்தன. இறுதியில் ஒபாமா வரைக்கும் கடாபியை கட்டித் தழுவியிருக்கின்றனர். இது மேற்கின் இன்னொரு பிரச்சாரமே. இது நாள்வரை மேற்கின் கொள்ளைக்கு எதிராகப் போராடும் வீரனாகக் கருதப்பட்ட கடாபியின் ஒமர் முக்தார் விம்பம் இப்போது சுக்கு நூறாக நொருங்கிப் போகிறது. இதன் இன்னொரு வடிவமாக ஆப்கானிஸ்தான் கைதிகளின் சித்திரவதைக் கூடங்களில் ஒன்றாக லிபியா பயன்படுத்தப்பட்டது. ஆக, உலகமயமாதல் கடாபியை தலைகீழாக மாற்றிப் போட்டது.

முன்பிருந்த கடாபி 2005ஆம் ஆணடின் பின்னர் மேற்கில் தங்கியிருக்கும் பலமிழந்த கோழை மனிதனாக மதிப்பிழந்து போனார்.

அப்போதே கடாபியின் முடிபு நிர்ணயிக்கப்பட்டுவிட்டது.

**- சபா நாவலன்**
கட்டுரையிலிருந்து.




# கடாபிக்குப் பின் லிபியாவின் எதிர்காலம்

தகவல் தொடர்புச் சாதனங்களால ஆளப்படும் உலகில், போரில் முதல் பலியாகும் உண்மையைக் கண்டறிவது எளிதான காரியமல்ல. லிபியாவில் கிளர்ச்சி ஆரம்பமாகிய முதல் நாளில இருந்தே, அனைத்து லிபியர்களும் கடாபிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வதைப் போன்ற பிரமையை ஊட்டி வளர்த்தன. அரசுக்கு எதிராக கலகம் செய்தவர்களை அடக்குவதற்கு கடாபி இராணுவத்தை அனுப்பிய பொழுது, அது 'லிபிய இராணுவமல்ல, மாறாக கூலிப்படை' என்று அறிவித்தார்கள். கடாபியிடம், 'ஆபிரிக்க கறுப்பினத்தவர்களைக் கொண்ட கூலிப்படை இருபபதாகவும், அவர்களே ஆர்ப்பாட்டம் செய்யும் மக்கள் மீது அடக்குமுறை பிரயோகிப்பதாகவும்,' மதிப்புக்குரிய ஊடகங்கள் கூட செய்தி வாசித்தன. கறுப்பர்களுக்கு எதிரான லிபியர்களின் இனவெறி சர்வதேச ஊடகங்களிலும் எதிரொலித்தது.

கடாபியின் மரணத்திற்குப் பிறகு லிபியா எப்படி இருக்கின்றது? அநேகமாக, ஊடகங்கள் லிபியா குறித்து செய்தி அறிவிப்பதை இனிமேல் நிறுத்தி விடலாம். லிபியர்கள் எந்த விதக் குறையுமற்று, சுதந்திரமாக, சுபீட்சத்துடன் வாழ்வதாக நாமும் நினைத்துக் கொள்ளலாம். ஆனால், பிரச்சினைகள் இனிமேல் தான் பூதாகரமாக வெளிக் கிளம்ப இருக்கின்றன. அரபு மொழி பேசும் வட ஆபிரிக்க நாடுகளில் லிபியா மிகக் குறைந்தளவு சனத்தொகையைக் கொண்டுள்ளது. இருப்பினும், 140 இனக்குழுக்களைக் கொண்ட சமுதாயத்தில் ஒற்றுமையைக் காட்டுவது சுலபமான காரியமல்ல. 40 றகும் குறையாத கிளர்ச்சிக் குழுக்கள், கடாபிக்கு எதிராகப் போரிட்டன. இஸ்லாமிய மத அடிப்படைவாதிகள், முன்னை நாள் அரச படையினர், இனக்குழுக்களை பாதுகாக்கும் ஆயுததாரிகள் என்று பலதரப்பட்டவர்கள். கடாபியின் கொடுங்கோல் ஆட்சி மீதான வெறுப்பு மட்டும இவர்களை போராடத் தூண்டவில்லை. தாராளமயப் படுத்தப்பட்ட 'கடாபியின் இஸ்லாத்தை' கடும்போக்காளர்கள் அங்கீகரிக்கவில்லை. அதேபோல, கடாபியின் 'ஆபிரிக்க சகோதரத்துவம்' இன வெறியர்களின் கண்களை உறுத்திக் கொண்டிருந்தது.

கறுப்பின ஆபிரிக்கர்களையும் சகோதரர்களாக மதித்து, 'ஆபிரிக்க ஒன்றியம்' உருவாக்க பாடுபட்ட கடாபியின் கொள்கைக்கு நேர் எதிரானவர்கள், இந்தப் புரட்சிப் படையினர். லிபியாவிற்கு தெற்கில் உள்ள ஆபிரிக்க நாடுகளில் மட்டும் கறுப்பினத்தவர்கள்' வாழவில்லை. 'லிபியாவின் எல்லைகளுக்குள் வாழும் கறுப்பின பிரஜைகள் குறித்து,' இனி உலகம் கேள்விப்படப் போவதில்லை. ஏனெனில் அவர்கள் யாவரும் 'புரட்சிப் படையினரால்' இனச சுத்திகரிப்பு செய்யப்பட்டு விட்டனர். சில அக்கறையுள்ள மனித உரிமை ஆர்வலர்கள் விசாரித்த பொழுது, 'கறுப்பர்கள் எல்லோரும் நைஜருக்கு அகதிகளாக சென்று விட்டனர்.' என்று பதிலளிக்கப் படுகின்றது. லிபியப் பிரஜைகளான கறுப்பினத்தவர்கள் மட்டும் இனச் சுத்திகரிப்பு செய்யப் படவில்லை. லிபியாவில் பல ஆபிரிக்க நாட்டவர்கள், கூலியாட்களாக, அகதிகளாக வாழ்ந்தனர். இவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு மில்லியன் அளவில் இருக்கும். வளைகுடா நாடுகளைப் போல, ஆபிரிக்கக் கூலிகளின் உழைப்பில் லிபியப் பொருளாதாரம் செழித்துக் கொண்டிருந்தது. அவர்களை விட, கடல் கடந்து ஐரோப்பா செல்வதற்காக வந்து குவிந்த ஆபிரிக்க அகதிகளுக்கும் லிபியாவில் தற்கால புகலிடம் கிடைத்தது.

'லிபியப் புரட்சி' ஆரம்பமாகிய அன்றிலிருந்து, லிபியாவில் சட்டம், ஒழுங்கு குலைந்து விட்டது. யார் வேண்டுமானாலும், எது வேண்டுமானாலும் செய்யலாம் என்ற அராஜகச் சூழல் நிலவியது. 'புரட்சிப் படையினர்' கடாபியின் விசுவாசிகளை மட்டும் வேட்டையாடவில்லை. கரு நிற மேனியைக் கொண்ட மக்களையும் நர வேட்டையாடினார்கள். போர் ஆரம்பமாகியவுடன், அயல நாடுகளில் அகதிகளாக தஞ்சம் புகுந்தவர்களில் பெரும்பான்மையானோர் கறுப்பினத்தவர்கள்.

தற்போது போர் ஓய்ந்த பின்னர், அங்கு நடந்த அக்கிரமங்கள் மெல்ல மெல்ல வெளிவருகின்றன. 'புரட்சிப் படையினரின்' முகாம்களை துப்புரவு படுத்தவும், கடினமான பணிகளைச் செய்யவும் கறுப்பின ஆண்கள் அடிமைகளாக வேலை வாங்கப் பட்டுள்ளனர். போரிட்டுக் களைத்த 'புரட்சிக் காரர்களின்' பாலியல் இச்சையைத் தீர்த்துக் கொள்வதற்கு கறுப்பினப் பெண்கள் பயன்பட்டுள்ளனர்.

கடாபியின் ஆட்சிக் காலத்தில் வீட்டுப் பணிப்பெண்ணாக வேலை செய்த கமேரூன் நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் தெரிவித்தார். 'அப்போதெல்லாம் வேலை செய்யும் இடங்களில், சில எஜமானர்கள் அடிப்பார்கள். சிலர் சம்பளம கொடுக்க மாட்டார்கள். ஆனால், இன்றுள்ள நிலைமை மிக மோசமானது. எல்லா லிபியர்களும் நிறவெறியர்களாகக் காணப்படுகின்றனர். ஆபிரிக்கர்கள் எல்லோரும் லிபியாவை விட்டு வெளியேறி விட்டனர்.'

லிபியாவின் புதிய ஆட்சியாளர்கள புரிந்துள்ள போர்க்குற்றங்கள் பற்றிய விபரங்கள், மெல்ல மெல்ல வெளி வந்து கொண்டிருக்கின்றன. கடாபியும், அவரது மகன் முத்தாசினும் உயிருடன் பிடிபட்டு, பின்னர் கொலை செய்யப் பட்ட விடயம், வீடியோக் காட்சிகளாக உலகெங்கும் வலம் வந்தன. இது குறித தும், நூற்றுக் கணக்கான கடாபி விசுவாசிகளின் படுகொலை குறித்தும் விசாரணை தேவை என்று, மனித உரிமை ஸ்தாபனங்கள் அழுத்தம் கொடுக்கின்றன. மேற்குலகம் அவற்றை எல்லாம் கண்டும் காணாதது போல நடந்து கொள்கின்றது. புதிய அரசானது, இஸலாமிய மத அடிப்படைவாதப் போக்கில் செல்வதையும், யாரும் பெரிது படுத்தவில்லை.

இருப்பினும், எதிர்காலத்தில் காட்சிகள் மாறலாம். எண்ணெய் வளத்தை பங்கு போடுவதில் தகராறு ஏற்பட்டால், போர்க்குற்ற விசாரணை சம்பந்தமான சர்ச்சைகள் எழலாம். இரண்டு வருடங்களுக்கு முன்னர், புலிகளை அழிப்பதற்கு இலங்கை அரசுக்கு பக்கபலமாக நின்ற மேற்குலக நாடுகள், பின்னர் தமது நண்பர்களை போர்க்குற்ற விசாரணைக்கு அழைத்து அழுத்தம் கொடுத்தன. வெள்ளைக்கொடியுடன் சரணடைந்த புலித் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்ட விவகாரம் போன்றே, கடாபியின் முடிவும் அமைநதிருந்ததை, மனித உரிமை நிறுவனங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. மேற்கத்திய நாடுகளுடன் முறுகல் நிலை தோன்றினால், அவர்கள் மீதும் குற்றச்சாட்டுகளை அடுக்குவதற்கு புதிய லிபிய அரசு தயாராகி வருகின்றது.

லிபியாவின் புரட்சியாளர்களுக்கும், மேற்குலகுக்கும் இடையிலான தேனிலவு விரைவில் முறியலாம். அப்போது லிபியாவில் எழும் நெருக்கடிகள், இன்றுள்ளதை விட மிக மோசமாக இருக்கும்

**- நன்றி : கலையகம்**

# வடக்கில் சுகாதாரசேவை அபிவிருத்தி மூன்று ஆண்டுகளில் நான்கு பில்லியன் செலவு

(யாழ்ப்பாணம்)

2009 ஆம் ஆண்டு முதல் இது வரை வடமாகாண வைத்திய சேவையை மேம்படுத்துவதற்காக வடமாகாண வைத்தியசாலைகளுக்கு நான்கு பில்லியன் ரூபா செலவில் உட்கட்டுமானங்கள், வைத்திய உபகரணங்கள், வைத்திய சேவை வாகனங்கள் முதலியவற்றை வழங்கி வடபகுதியின் சுகாதார சேவையை மேம்படுத்தியிருப்பதாக வடமாகாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தாதிய உத்தியோகத்தர், குடும்பநல உத்தியோகத்தர் ஆகியோரிற்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு மற்றும் வடமாகாண வைத்தியசாலைகளுக்கு மருத்துவ சேவை வாகனங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு தலைமை உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிகையில் வடமாகாண வைத்தியசாலைகளில் ஆளணியினரே பற்றாக்குறையாக இருந்துவந்தது தற்சமயம் இன்றில் இருந்து அத்தகைய ஆளணியினர் பிரச்சினையும் நிவர்த்தி செய்யப்படுவதாகக் குறிப்பிட்ட அவர் வைத்தியசாலைகளுக்கு 254 தாதிய உத்தியோகத்தர்களையும் 202 குடும்பநல உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் எனவும் தெரிவித்தார்.

இவர்களுக்கான நியமனக்கடிதங்கள் நேற்று வழங்கப்படுவதாகவும் இதில் 174 தாதிய உத்தியோகத்தர்களும் 129 குடும்பநல உத்தியோகத்தர்களும் வன்னி வைத்தியசாலைகளுக்கும், யாழ். போதனா வைத்தியசாலைகளுக்கும் 80 தாதிய உத்தியோகத்தர்கள உள்ளடங்குவதாகவும் குறிப்பிட்டார்.

இன்று நியமனம் பெறும் தாதிய உத்தியோகத்தர்கள் குடும்பநல உத்தியோகத்தர்கள் மாவட்ட வைததிய சாலைகளிலும் கிராமிய வைததிய சாலைகளிலும் சிறந்த முறையில் சேவையாற்றி சிறப்பான சுகாதார சேவையை மக்களுக்கு பெற்றுக்கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி வடமாகாண பிரதம செயலாளர் சி.சிவசுவாமி ஆகியோர் தாதிய உ்த்தியோத்தர் குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கிச் சிறப்பித்தனர்.

மேலும் ஆளுநரின் செயலாளர் சி.இளங்கோவன் வடமாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் மாவட்ட சுகதார சேவைகள் பணிப்பாளர்கள், வடமாகாண சுகாதார அமைச்சின் அதிகாரிகள் உட்பட பெருமளவானவர்கள் இந்நிகழ்வில் கலந்துசிறப்பித்தனர்.(பா)

## சிவதாசனின்...

இன்று செவ்வாய்க்கிழமை காலை முதல் நாளை புதன்கிழமை பிற்பகல் 1 மணிவரை பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும் இறுதிக்கிரிகைகள் நடைபெற்று பின்னர் மாவிட்டபுரம் நகுலேஸ்வரம் செம்பொன்வாய்க்காலில் தகனம் செய்யப்படும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி விடுத்துள்ள செய்திக குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூட்டமைப்புடனான...

எனவும் அவர் கூறினார். அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் இடையில் நாளை இடம் பெறவுள்ள பேச்சுவார்த்தைகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையில் சில தினங்களில் பேச்சுவார்த்தை இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பேச்சுவார்த்தையை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஆரோக்கியமான முறையிலேயே பார்க்கின்றது. அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பேச்சு நடத்தி விரைவில் அரசியல தீர்வு தொடர்பில் இணககப்பாடு ஒன்றுக்கு வரவேண்டும் என்றே எமது கட்சி விரும்புகின்றது. ஆனால் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுக்கள் இரகசியமான முறையில் இடம்பெறக்கூடாது. வெளிப்படைத்தன்மையுடன் பேச்சுக்கள் இடம்பெறவேண்டும் எனவும் தயாசிறி ஜயசேகர கூறினார்.

## விடுவிக்கப்படாத...

நடைபெற்றபோதே அவர இந்த உறுதிமொழியை அளித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் தென்மராட்சிப் பகுதி யில் விடுவிக்கப்படாத நிலையிலுள்ள பொதுமக்களின் வீடுகள், காணிகள், வீதிகள் மற்றும் பயிர்ச்செய்கை நிலங்கள் எண்பவற்றை மீளப்பெற்றுக் கொடுப்பதற்கும அப்பகுதிகளில் மக்களின் மீள்குடியமர்வு உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி நிவர்த்திசெய்து கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர டக்ளஸ் தேவானந்தா உறு தியளித்தார். காட்டு மிருகங்களான பன்றி மற்றும் குரங்கு போன்ற மிருகங்களினால் விவசாயிகள் எதிர்நோக்கிவரும் அழிவுகள் தொடர்பில் குழுவொன்றை அமைத்து அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதிமொழி வழங்கிய அமைச்சர் அவர்கள் கால்நடைகளால் விவசாயிகள் மற்றும் நெற்செய்கையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நகரசபை மற்றும் பிரதேச சபை விரைவான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென்றும் அவற்றின் தலைவர்களுக்கு அவசர பணிப்புரை வழங்கினார்.

இதன்னிடையே விவசாய சங்கங்களுடன் இணைந்து பிரதேச நகர சபைகள் கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் அதேவேளை அவற்றுக்கான தண்டப்பணத்தையும், பராமரிப்புச் செலவையும் கால்நடைவளர்ப்போரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார். முக்கியமாக, இவ்வாறான பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின்போது அரச மற்றும் அரசசார்பற்ற அதிகாரிகள் மட்டுமல்லாது பொதுமக்களும் உண்மைத் தன்மையுடன் வெளிப்படையாக கருத்துக்களை முன்வைக்க வேண்டுமெனபதுடன் அப்போது தான் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும் என்பதுடன் எல்லோருடைய ஒத்துழைப்பும் ஒத்தாசையும் இன்றியமையாததாகும் என்றும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அத்துடன் பிரதேசத்தின் கல்வி நடவடிக்கைகள் பொதுமக்கள் எதிர்நோக்கி வருகின்ற இடர்பாடுகள் மற்றும் அவர்களது பாதுகாப்பு சுகாதாரம் மின்சாரம் வீதி அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன் அவை தொடர்பிலுள்ள பிரச்சினைகள் குறித்தும் அமைச்சர இதன போது ஆராய்ந்தறிந்து கொண்டார். இந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் ஈ.பி.டி.பியின் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் பிரதேச செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் மற்றும் பண்டத்துறை பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட அரச அரசசார்பற்ற திணைக்களங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## அன்ரன் பாலசிங்கத்தை...

ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் போதிய ஒத்துழைப்பின்மை, தனிப்பட்ட விரோதம் ஆகியன நிலவியதுடன், பிரபாகரன் இந்த விடயத்தில் போதியளவு அறிவைக் கொண்டிராமை, மோசமான தீர மானம் எடுத்தமை போன்றன இலங்கையில் மேற்கொள்ளப் பட்ட சமாதான முயற்சிகளுக் குப் பெரிதும் முட்டுக்கட்டையாக அமைந்திருந்தன.

முன்னரங்க நிலைகளுக்கு என்னை அழைத்துச் சென்ற ஜெனரல் சரத் பொன்சேகா உலங்கு வானூர்தி நின்ற இடம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த வேளையிலும், பின்னர் இருவரும் உலங்கு வானூர்தியில் பயணித்தபோதும், பின்னர் முன்னரங்க நிலையில் நின்ற வாறும் அரசியற் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு கிடையாது என்றும், ஆனால் இராணுவப் பிரச்சினை ஒன்றுக்கு இராணுவத் தீர்வு உள்ளது என்றும் என்னிடம் கூறினார்.

இந்த இருவிடயங்களிலும் உள்ள வித்தியாசத்தைத் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. இலங்கையில் சமாதான முயற்சிகளை மேற்கொண்டபோது அனைத்துலக சமூகம் கோபத்திற்கும் குழபத்திற்கும் உள்ளாகியிருந்தமைக்கு தீவிரவாதம் என்ற ஒரேயொரு விடயமே பிரச்சினையாக இருந்தது.

அனைத்துலக சமூகத்தின் பெரும்பகுதி தீவிரவாதத்தை முழுமையாக விடுதலைப் புலிகளே பிரதிநிதித்துவப்ப டுத்துவதாகக் கருதியிருந்தனர் என்றும் ஆர்மிரேஜ் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இவ்வாறான கருத்து நியாயமற்றது - மேலோட்டமானது. அனைத்துலக சமூகத்தின் மத்தியில் இலங்கை தொடர்பாக மிகவும் குறைந்த அக்கறையும் புரிந்துணர்வுமே இருந்துள்ளன.

இலங்கை விடயத்தில் புரிந்துணர்வுகளை ஏற்படுத்துவதிலும், இங்கு இடம்பெற்ற பிரச்சினைகள், குழப்பங்கள் போன்றவற் றைத் தெளிவுபடுத்துவதிலும் நோர்வே பெரும் பங்காற்றியிருந்தது. இது தொடர்பில் நோர்வேயின் முயற்சியைத் வியந்துபாராட்டுவதுடன், மிலிந்தமொறகொட தனக்குள்ள தனிப்பட்ட தகைமையுடன் இங்கிருந்திருந்தால், ஏன் நானும்கூட வேலையற்ற குடிமகனாகவே இருந்திருக்கவேண்டும் என ஆர்மிரேஜ் மேலும் தெரிவித்துள்ளார்

## விபசாரத்தில்...

சட்டவைத்திய அதிகாரியின் மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தி அவர்களுக்கு ஏச்.ஐ.வி தொற்று ஏற்பட்டிருக்கிறதா என்பது குறித்து அறிக்கை சமர்ப்பிக்கு மாறும் பொலிஸாருக்கு உத்தர விட்டார். நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் மூன்று பெண்களும் இரண்டு ஆண்களும் அடங்கலாக ஐந்துபேரும் யாழ். போதனா வைத்திய சாலையின் சட்டவைத்திய அதிகாரியின் மருத்துவ பரிசோதனைக்காக பொலிஸாரினால் யாழ். நீதிமன்றத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டனர்.

## இனப்பிரச்சினைக்கான...

பகிர்ந்துகொள்கிறது. இந்தியாவின் இஸ்திரத் தன்மைக்கு அண்டை நாடுகளினுடனான உறவு முக்கியமானது. இந்தியாவின் நிலமற்றும் கடல் எல்லைகளைப் பகிர்ந்துகொண்டு பாகிஸ்தான், பங்களாதேஸ் நேபாம் இலங்கை உள்ளிட்ட அனைத்துநாடுகளினதும் சிறுபான்மை இனங்கள் சார்ந்த பிரச்சினைகள் இந்தியாவையும் ஒரு வகையில் பாதிக்கிறது. எனவே இந்தியாவின் இஸ்திர தன்மைக்கு இந்த நாடுகளில் நிலவவேண்டும்.

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான உறவு முன்னெப்போதும் இருந்திராத அளவுக்கு இப்போது வளர்ச்சியடைந்திருக்கிறது என்று இங்கு தெரிவித்த ஹியாம் சரண், இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்திய - இலங்கை உறவின் முக்கியத்து வத்தை அதிகம் உணர்ந்தவராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கைத் தீவுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான உறவில் இலங்கையின் வடபகுதி முக்கிய பங்கு வகித்து வந்ததாகத் தெரிவித்த அவர், தலை மன்னார் - இராமேஸ்வரம் இடையிலான கப்பல் போக்கு வரத்து இந்த இணைப்பின் பிரதான அம்சமாக இருந்தாகவும் குறிப்பிட்டார்.

வட பகுதி பலாலி விமான நிலையத்தை புனரமைக்கும் பணியில் இப்போது இந்தியா ஈடுபட்டுள்ளது. காங்கேசன்துறை துறைமுகப் பகுதி கடற்பரப்பில் காணபபடும் சேதமடைந்த கப்பல் கழிவுகளை அகற்றி துறைமுகத்தை துரிதமாகச் செயற்படச் செய்வதற்கு இந்தியா உதவி வருகிறது என்றார் அவர்.

இவற்றின் அடுத்த கட்டமாக இராமர் பாலம் என்று அழைக்கப்படும் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான பாலம் அமைக்கும் திட்டம் மீண்டும் செயற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் இங்கு தெரிவித்தார்.


இந்தியாவுக்கும், இலங்கையின் வட பகுதிக்கும் இடையே காணப்படும் இத்தகைய இறுக்கமான தொடர்புகள் மூலம், எதிர்காலத்தில் இந்திய - இலங்கை உறவில் இலங்கையின் வடபகுதி குறிப்பிடத்தக்கதொரு வகிபாகத்தைக் கொண்டிருக்க முடியும் என்றும் அவர் இங்கு தெரிவித்தார்.

## பகிடிவதை...

வைத்தியாசாலையிலுள்ள பொலிஸ காவலரணில் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பில் பல்கலை வட்டாரமொன்று கூறுகையில், நேற்று மதியம் கைலாசபதி கலையரங்கில் புகுமுக மாணவர்களுடன் சிரேஷ்ட மாணவர்கள் அறிமுகத்தை ஏற்படுத்திக்கொள்வதற்கான மிக்ஸிங் - அப் எனும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, குறித்த அரங்கத்திற்கு வந்த நாலைந்து ஆண் மாணவர்களுடன் வந்த சிரேஷ்ட மாணவியொருவர், யார் தமிழ்ச் செல்வன் என வினவியுள்ளார். அதன் பின்னர் குறித்த மாணவர் அடையாளங்காணப்பட்டு, சிரேஷ்ட மாணவர்களால் பலர் முன்னி லையில் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டார். இதனால் நிலைகு லைந்துபோன புகுமுகமாணவர் கீழே விழுந்தபோது, அவரது தலையில கால்களாலும் தாக்குதல் நடத்தப்பட்டது. இதையடுத்து அவர் மூர்ச்சையடைந்தார். அதன்பின்னர் அவர் நினைவிழந்து சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவித்தது.

மேற்படி மாணவர் இறுதி யுத்தத்தின் போது எறிகணை வீச்சினால் தலையில் படுகாயமடைந்து, தெய்வாதீனமாக உயிர் தப்பிய நிலையில் நலன்புரி நிலையத்தில் பல்வேறு இன்னல்களுக்கும் மத்தியணில் கல்வி கற்று பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியிருந்தார் எனவும அவ்வட்டாரம் தெரிவித்தது.



# தனிமைப்படுத்தப்படும் அபாயம் இலங்கைக்கு எப்போதும் உண்டு

## விக்கிலீக்ஸ் வெளியிடும் தகவல்



(கொழும்பு)

உலக நாடுகளிலிருந்து இலங்கை தனிமைப்படுத்தக் கூடிய அபாயம் காணப்படுவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பெட்ரிசியா புட்டினாஸ் தெரிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்குதல், மனித உரிமைகளை மேம்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதே அமெரிக்காவின் எதிர்பார்ப்பு என அவர் தெரிவித்துள்ளார்.

மியன்மாரை மேற்குலக நாடுகள் ஒதுக்கி தனிமைப்படுத்தியுள்ளதனைப் போன்று இலங்கை தனிமைப்படுத்தப்படுவதனை அமெரிக்கா விரும்பவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி இந்த குறிப்பு அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மிக நீண்ட காலம் புலிகளுடன் பிரிவினைவாத யுத்தம் நடைபெற்றதாகவும், யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய தொலைநோக்குத் திட்டம் இலங்கை அரசாங்கத்திடம் காணப்படுகின்றதா என்பது கேள்விக்குறியே என அவர் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



2012 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதற்கான முன்னேற்பாடுகளில் ஜனாதிபதி ஈடுபடுவதையும், அருகில் நிதியமைச்சின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர இருப்பதையும் காணலாம்.

# அம்புலன்ஸிற்குள் வைத்து சிறுமி மீது துஷ்பிரயோகம்

(கொழும்பு)

கண்டி வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்புலன்ஸ் வண்டி ஒன்றுக்குள் வைத்துச் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அதன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் விவகாரத்துக்கான பிரிவு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

கண்டி வைத்தியசாலையின் இரத்த வங்கிக்குச் சொந்த மான அம்புலன்ஸ் வண்டியின் சாரதியே கைது செய்யப்பட்டவராவார். பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளான 13 வயதான சிறுமி வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

# பல்கலை வளாகங்களில் பொலிஸ் காவலரண்கள்

பல்கலைக்கழக வளாகங்களில் பொலிஸ் காவலரண்களை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. பல்கலைக்கழகளில் மாணவர்களுக்கு இடையில் ஏற்படக்கூடிய மோதல் நிலைமைகளை கட்டுப்படுத்தும் நோக்கிலேயே காவலரண்கள் அமைக கப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக பொலிஸ் என்ற பெயரில் இயங்கவுள்ள காவலரண்களில் ஆண், பெண் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் இப்படியான பொலிஸ் காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் உயர்கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த நிரந்தரத் தீர்வு அவசியமாகும்

## அமெரிக்கா தெரிவிப்பு

(காலி)

தமிழ் மக்களுக்கு மெய்யான நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் நிரந்தர தீர்வுத் திட்டங்களை முன்வைக்க வேண்டுமென அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது.

காலியில் நேற்று ஆரம்பமான சர்வதேச கடல் பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்ட அமெரிக்க பிரதிப் பாதுகாப்புச் செயலர் ரொபர்ட் வெச்சர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

மனித உரிமைகளை உறுதி செய்ய இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம் பெற்றதாகக் குற்றம் சுமத்தப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும யுத்தக் குற்றச் செயல்களுக்கு எதிராக விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியம். இலங்கையின் சகல பிரஜைகளினதும் மனித உரிமைகளை உறுதிப்படுத்தவேண்டியது அவசியமானது என்பதனையே அமெரிக்கா வலியுறுத்திவருகிறது.

குற்றச் செயல்களுக்குத் தண்டனை வழங்குவது தொடர்பில் இலங்கை அரசாங்கம் யதார்த்தமான முனைப்புக்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# போதைப் பொருள் ஒழிப்பு பணியகத்திற்கு கையெழுத்திடச் சென்றவர் உயிரிழப்பு

(கொழும்பு)

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்திற்கு கடந்த 30 ஆம் திகதி கையெழுத்திடச் சென்றபோது இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பான அனைத்து சந்தேக நபர்களையும் கைது செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

மாளிகாவத்தையை சேர்ந்த மொஹமட் சதாக் மொஹமட் பாஹிம் எனும் இந்த இளைஞரின் மரணம் தொடர்பான வழக்கின் தீர்ப்பை அறிவித்த நீதவான் லங்கா ஜயரட்ன, குற்றச்செயல் இடம்பெற்றிருக்கலாம் என நியாயமான சந்தேகம் உள்ளதெனத் தெரிவித்ததுடன் இச்சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து சந்தேக நபர்களையும் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மேற்டி இளைஞர் போதைப் பொருள் பணியகத்தில் நீர் அருந்தியபோது மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழந்ததாக போதைப் பொருள் பணியகத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்தார் என கோட்டை பொலிஸார் தாக்கல் செய்த அறிக்கையில் தெரிவித்தனர்.

எனினும் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையின்படி, உயரிழந்த இளைஞரின் வயிற்றிலோ உணவுக் குழாயிலோ போதியளவு உணவோ நீரோ காணப்படவில்லை எனத் தெரிவித்ததை சுட்டிக்காட்டிய நீதவான் எனவே சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கையுடன் பொலிஸ் அறிக்கை முரண்படுவதாக சுட்டிக்காட்டினார்.

உயிரிழந்த இளைஞரின் உடலில் காணப்பட்ட காயங்கள் தொடர்பாக போதைப்பொருள் ஒழிப்பு பணியக அதிகாரிகள் சமர்பித்த அறிக்கையும் சட்ட வைத்திய அறிக்கையுடன் முரண்படுவதாகவும் நீதவான் சுட்டிக்காட்டினார்.

உயிரிழந்த இளைஞனின் மனைவியான பாத்திமா ரிஸானா சாட்சியமளிக்கையில், தனது கணவருக்கும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்திற்கும் இடையில் பிரச்சினையொன்று இருந்ததாகவும் தனது கணவரின் திடீர் மரணத்திற்கு இதுவே காரணமாக இருக்கலாம் எனவும் தெரிவித்திருந்தார்.

# தனியார் பஸ் பணிப் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டதாக அறிவிப்பு



தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தால் நேற்று நள்ளிரவு முதல் மேற்கொள்ளப்படவிருந்த பணிநிறுத்தம் தனியார் பஸ் சங்கங்களின் உரிமையாளர்களுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விலையேற்றத்திற்கு ஏற்ப பஸ் கட்டணங்களில் திருத்தங்களை மேற்கொள்ள தனியார் போக்குவரத்து அமைச்சு உள்ளிட்ட அதிகாரிகள் எழுத்து மூலம் உறுதி வழங்கியதை அடுத்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

பஸ் உரிமையாளர் சங்க உறுப்பினர்கள் மற்றும் தனியார் போக்குவரத்து அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கிடையில் நேற்று முற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த மாத இறுதியில் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமக்கு எரிப்பொருள் நிவாரணம் வழங்கவேண்டும் எனவும், அது தொடர்பில் நவம்பர் 14 ஆம் திகதி உரிய பதில் போக்குவரத்து அமைச்சால் கிடைக்காத பட்சத்தில் அதற்கெதிராக எதிர்ப்பு நடவடிக்கையொன்றை மேற்கொள்வோம் என தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அரசாங்கத்தை எச்சரித்திருந்தது. இந்நிலையிலேயே நேற்று காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை தனியார் போக்குவரத்து அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் தனியார் பஸ் உரிமையாளர்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தனர்.

அப் பேச்சுவார்தையில் அதிகரிக்கப்பட்டுள்ள டீசல் விலைக்கு ஏற்ப பஸ் கட்டணத் தை ஒரு மாதத்திற்குள் அதிரிப்பதாக அமைச்சு உறுதியளித்ததாகவும் அதன் பின்னரே தமது எதிர்ப்பு நடடிவடிக்கைகளை கைவிடுவதற்று சங்கம் தீர்மானித்ததாகவும் கெமுனு விஜயரட்ன மேலும் தெரிவித்துள்ளார்

# இரண்டாவது போட்டியில் இலங்கை அணி வென்றது

(டுபாய்)



இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்றைய தினம் டுபாயில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 25 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 235 ஓட்டங்களை பெற்றது. இதில் தரங்க 77, ஜெயவர்த்தன 50 ஓட்டங்களை பெற்றன. பந்துவீச்சில் அஜ்மல் 3, அப்ரிடி 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு ஆடிய பாகிஸ்தான் அணி 46.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களை இழந்து 210 ஓட்டங்களை பெற்றது. இதில் உமர் அக்மல் 91 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் மலிங்க 3, பெரேரா, பெர்னாண்டோ தலா 2 விக்கெட்டை கைப்பற்றினர். ஆட்டநாயகனாக மலிங்க தெரிவானார்.

## யாழ். குருநகர் வாசி வவுனியாவில் உயிரிழப்பு

வவுனியா - கூடன்குளம் முருகையா வாவியில் நேற்றுமுன் தினம் மாலை 4.30 மணியளவில் நீராடச் சென்ற குழுவில் அடங்கிய ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

யாழ். குருநகர் 61 ஆம் வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் 29 வயதுடைய சின்சிலோ வேசான் என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 நவம்பர் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.